விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 27 புதன்கிழமை (09.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 142


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சிங்கக் கொடி விவகாரம் சிக்கித்தவிக்கும் சம்பந்தன்

## நாடாளுமன்ற கூட்டத்தில் விவாதிக்க திட்டம்

(கொழும்பு)

மேதினக் கூட்டத்தில் சிங்கக்கொடி பறக்க விடப்பட்ட விவகாரம் பூதாகரமாக கிளம்பியுள்ளமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கவலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவரது இவ்விடயம் குறித்து நாளை நடைபெறும் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதால் இரா.சம்பந்தன் பதிலளிக்கக் கூடிய வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)



## ஈழத்தமிழர்கள் மீது பொலிஸாரின் பார்வை

(சென்னை)

முள்ளிவாய்க்கால் பேரழிவின் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் நெருங்கிவரும் நிலையில், தமிழ் நாட்டில் முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களை கியூபிரிவு பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்ட யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி முடிபுக்கு வந்தது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்களைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்திற்கான இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறியுள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். மாற்றமடையும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய இறக்குமதி வரையறை மாறுகின்ற நிலையில், இந்த வருடம் அது 20.9 பில்லியன் அமெரிக்கடொலர்களாக (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபை தேர்தல் செப்ரெம்பரில்!

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அரச தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிணங்க எதிர்வரும் செப்டம்பர் மாதம் கிழக்கு மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அரச தரப்பு முக்கியஸ்தொருவர் குறிப்பிட்டார்.

தேர்தலுக்காக கிழக்கு மாகாண சபையினை ஜூன் மாதத்தின் எந்த நேரத்திலும் கலைக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. முதலில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ பிரசன்னம் குறித்து பேசாது தவிர்த்த கோத்தபாய

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுடன் பேசாது பாதுகாப்புச் செயலர் விலகிக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் புனர்வாழ்வுபெறாத விடுதலைப்புலிகள் என்று அரசால் கூறப்படுபவர்கள் சிலர் அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தலைவர் இரா.சம்பந்தருக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் அநேகமானவர்கள் திருமணம் செய்து குடும்பத்துடன் வாழ்ந்து வருபவர்கள் என்றும் தங்களுடைய தொழிலை பார்த்துக்கொண்டு ஒழுக்கமாக வாழ்ந்து வந்தவர்கள் என்றும் தான் பாதுகாப்பு செயலரிடம் தெரிவித்ததாக சம்பந்தர் தெரிவித்தார்.

அவர்களை தடுத்து வைப்பதற்கோ அல்லது கைது செய்வதற்கோ எந்த விதமான காரணமும் இல்லை என்றும், அவர்களுக்கு புனர்வாழ்வு தேவையில்லை என்றும் தான் எடுத்துக் கூறியதாகவும் சம்பந்தர் கூறுகிறார்.

எனவே அவர்கள் தாமதமில்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு செயலரிடம் தெரிவித்ததாகவும் சம்பந்தர் கூறுகிறார். அவர்களின் கைதுக்கான காரணமும் தமக்கு விளக்கப்பட்டதாகவும் எனினும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தனக்கு அவர் வாக்குறுதி அளித்ததாகவும் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், திருகோணமலையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பிலேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என்றும், போருக்கு பின்னர் இன்னமும் அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து எந்த பேச்சும் இடம்பெறவில்லை எனவும் சம்பந்தர் கூறுகிறார்.

ஆனால் இதற்கு முன்னர் அந்த விடயம் குறித்து பேசப்பட்டதாகவும் ஆனாலும் அரச தரப்பிலிருந்து எந்த நடவடிக்கையும் இல்லை என்றும், வடக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் மினி சூறாவளி

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி காற்றினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வீடுகள் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது. எனினும் சேதவிபரம் குறித்து, முழுமையாக தெரியவில்லை. (எ-11)

## நாட்டின் அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பை இணங்க வைக்க முடியும்

### ஐ.தே.க.கட்சி திட்டவட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்தப்பட்ட எதிர்க்கட்சிகளின் பொது மேதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை சிங்கக் கொடியை ஏந்த வைத்ததுபோல, நாட்டின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அவரை ஓர் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் நாம் தொடர்ந்தும் செயலாற்றுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக பேச்சாளர் கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து விரட்டியடித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை நாட்டில் நிலைநிறுத்த மக்கள் உணர்வுடன் செயற்படுகின்றனர் என்பது எமது மே தின நிகழ்வுகளில் காணக்கூடியதாக இருந்தது.


நாட்டின் எப்பாகத்திற்கும் நாம் சென்றாலும் மக்கள் எம்முடனே கைகோர்த்திருப்பார்கள். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொது எதிரணியினரின் கூட்டு மேதினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர், எமது கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சிங்கக் கொடியை ஏந்தினார்.



இதன்மூலம் அவர் ஐக்கிய இலங்கைக்குள் தமக்கோர் அரசியல் தீர்வு வேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடனான ஒப்பந்தங்களில் ஜனாதிபதி கையொப்பமிடமாட்டார்

### அமைச்சர் திஸ்ஸ நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடமாட்டார். ஏனென்றால் பெரும்பான்மை இனமக்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற அச்சமே இதற்கான பிரதான காரணமாகும். இதனை நான் கூட்டமைப்பின் தலைவரும் (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மலேரியா நோய் தொற்றுக் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## மலேரியா தடுப்பு இயக்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 7 பேருக்கு மலேரியா ஏற்பட்டுள்ளது என யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் வைத்திய அதிகாரி இ. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலேரியா தொற்று நோயின் தாக்கத்திற்கு உள்ளாகாத மாவட்டங்களில் ஒன்றாக யாழ் மாவட்டம் கடந்த மூன்று, நான்கு வருடமாக இருந்து வந்தது.

ஆனால் மலேரியா மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இந்த வருடத்தில் கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய கடந்த 3 மாதங்களில் மட்டும் 7 பேருக்கு இந் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

நோய்த் தொற்றுக்குள்ளானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனையின் போது 5 பேருக்கு மூளை மலேரியாவும் 2 பேருக்கு சாதாரண மலேரியாவும் ஏற்பட்டுள்ளது அறியவந்தது.

இதில் மூளை மலேரியா தொற்றுக்குள்ளானவர்கள் ஆபிரிக்க நாடுகளிலிருந்து மீண்டும் யாழ்.மாவட்டத்திற்கு வந்தவர்கள் என்பதும் சாதாரண மலேரியா தொற்றுக்குள்ளானவர்கள் வன்னியில் குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தவர்கள் என்பதும் தெரியவந்தது.

இதில் அல்லைப்பிட்டியினைச் சேர்ந்த 2 பேரும் நாரந்தனையைச் சேர்ந்த ஒருவரும் இனங் காணப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளிலும், இந்தியாவிலும் மலேரியா நோய்த் தொற்று அதிகளவில் உள்ளதால் அந்த நாடுகளுக்கு செல்லவுள்ளவர்கள் தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்வதோடு மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள் உடனடியாக இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகரித்து வரும் மலேரியா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையை குறைக்க நுளம்புக் குடம்பிகள் உண்ணும் மீன்களை இலவசமாக பொதுச்சுகாதார பரிசோதர்கள் ஊடாக விநியோகித்து வருகின்றோம்.

அத்தோடு நுளம்புத் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தி வருகின்றோம்.

இந்திய பிரஜைகள் பலர் தொழிலின் நிமித்தம் யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ளனர். அவர்களிடத்தில் இரத்த பரிசோதனை மேற்கொள்வது பெரும் பிரச்சினையாகவுள்ளது. காரணம் வெளிநாட்டுப் பிரஜைகள் என்பதால் வெளிவிவகார அமைச்சிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. இதனால் கொழும்பிலுள்ள உயரதிகாரிகள் ஊடாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோய்த்தொற்று தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு இல்லை என அவர் மேலும் கூறினார்.

இந்த சந்திப்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் பல வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-6)

# விபத்தில் சிக்கி இருவர் காயம்

(கனகபுரம்)

பரந்தன் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவனும் குடும்பஸ்தரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் 2ஆம் கட்டைப்பகுதியிலிருந்து பரந்தன் நாகதம்பிரான் ஆலயத்தை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன், பரந்தனிலிருந்து முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேருக்குநேர் மோதியதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சா.செல்வக்குமார் (வயது 37) என்ற குடும்பஸ்தரும் பரந்தன் ஓராங்கட்டை ஆர்.சி.ரி.எம் பாடசாலையில் கல்வி பயிலும் மு.செந்தூரன் (வயது11) என்ற சிறுவனும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மிகவும் ஆபத்தான நிலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-9-259)

# வெசாக் அன்று இறைச்சி விற்ற ஐவருக்கு அபராதம் விதிப்பு

வெசாக் தினமன்று இறைச்சிக் கோழி விற்ற ஐவருக்கு யாழ். நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபாய் அபராதமாக விதித்துள்ளது.

வெசாக் தினமன்று இறைச்சிக் கோழிகளினை பகிரங்கமாக விற்றனர் என்ற குற்றச்சாட்டில் சின்னக்கடையினைச் சேர்ந்த ஐவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த ஐவருக்கும் தலா 3 ஆயிரம் அபராதமாக விதித்ததோடு பறிமுதல் செய்யப்பட்ட கோழிகள் விற்பனையில் பெறப்பட்ட 14 ஆயிரத்து 800 ரூபா பணம் என்பன அரசுடமையாக்கப்பட்டன. (அ-4)

## புளியங்கூடல் முத்துமாரி கோவிலில்

# தங்கநகை திருடியவர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தின் போது 22 இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த தங்க நகைகளினை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான எழுவர் கொண்ட குழுவில் ஐவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று குறித்த கோவில் கும்பாபிஷேகத்தின்போது 40 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகள் கோவிலுக்கு வந்த பக்தர்களிடம் கொள்ளையடிக்கப்பட்டன. இக் கொள்ளையோடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலையினைச் சேர்ந்த நான்கு பெண்கள் உட்பட 7பேர் ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் நேற்றுவரை வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஊர்காவற்துறை நீதவான் மகேந்திரராஜா முன்னிலையில் குறித்த வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கே.சுகாஷ் குறித்த நபர்களுக்கு பிணை வழங்குவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்த நிலையில், வழக்கினை விசாரணை செய்த நீதவான் 3ஆம், 4ஆம் சந்தேக நபர்களான இரு பெண்களில் ஒருவர் கர்ப்பிணியாக காணப்பட்டதானலும் மற்றைய நபருக்கு திருமணமாகவிருப்பதனாலும் பிணையில செல்ல அனுமதித்ததோடு ஏனைய ஐவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியிலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு களவுபோனதாக கூறப்படும் நகைகளான சான்றுப் பொருட்களை விரைவில் மீட்குமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். (எ-4)

# திடீரென அதிகரித்த மின்சாரம் எரிந்தன மின் சாதனங்கள்

(யாழ்ப்பாணம்)

மின்னழுத்தத்தில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பினால் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள அனைத்து மின்னியல் உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

இச் சம்பவம் உடுவில் அம்பலவாணர் வீதி மற்றும் ஆர்க் வீதிகளை அண்டிய பிரதேசங்களில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் மாலை நேரத்தில் குறித்த பகுதியில் காணப்பட்ட மின்கம்பிகள் ஊடாக 440 வோல்ட் மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதனால் குறித்த தினத்தில் மின்னிணைப்பில் இருந்த பெறுமதிமிக்க மின்னியல் சாதனங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

இதில் 25 தொலைகக்காட்சி பெட்டிகள் தொலைபேசிகள் என அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளதோடு சில வீடுகளில் வயர் இணைப்புக்களும் எரிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## அறிவித்தல்

### 18 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 101/25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல. 101/25, ஸ்ரான்லி வீதியில் (மக்கள் வங்கி ஒழுங்கை) (18) பதினெட்டு மீற்றர் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத் தொடர்புக் கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ் மாநகரசபைக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(C-6569)

## அறிவித்தல்

### 24 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இல. 62/20, ஸ்ரான்லி வீதியில் (24) இருபத்திநான்கு மீற்றர் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத் தொடர்புக் கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ் மாநகரசபைக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(C-6569)

## அறிவித்தல்

### 100 மீற்றர் தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்
### 51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இல. 51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறையில் (100) நூறு மீற்றர் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள், இத்தொலைத் தொடர்புக் கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ் மாநகரசபைக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(C-6569)

கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.
YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு
விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8284)

வீடு விற்பனைக்கு
திருநெல்வேலியில்
ஒரு பரப்புக் காணியுடன்
கூடிய வீடு
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
0775150600
(8423)




WANTED
BUSINESS DEVELOPMENT OFFICERS
Male / Female
MD's SECRETARY
(Female 35 - 40 yrs)
Call for an Interview
072 6996019
(10.05.2012)
(8420)

சிங்கள, ஆங்கில வகுப்புகள்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும்
(குறைந்த, இலகு தவணைக் கட்டண முறை)
North Lead Educational Center
No-328, Stanly Road, Jaffna.
Tel : 222 4459, 0772533390. Fax : 222 4460

## இன்று ஒரு தகவல்

# தாவும் மனிதர்கள்

உழைப்பும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள். அதைவிட்டு விட்டு ஒரு இடத்திலும் வேலை வெட்டியில்லாமல் இருந்து விட்டு, உயரே போக வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது.

பலபேர் அப்படித்தான் கற்பனை செய்கிறார்கள். அந்தக் கற்பனையிலேயே பாதி வாழ்க்கை மறைந்து விடுகிறது.

உழைப்பு என்ற வழியையும் நேர்மை என்ற வழியையும் ஒதுக்கி விட்டு... குறுக்கு வழியிலே ஓட நினைக்கிறவர்கள் குப்புற விழுந்து விடுகிறார்கள்.

எந்தத் தொழிலை நாம் செய்தாலும் சரி, அந்தத் தொழிலுக்குரிய பெருமையை நாம் புரிந்து கொண்டு விசுவாசத்துடன் ஈடுபட வேண்டும்.

அப்படி இல்லாமல், ''என்ன சேர் வேலை இது. இந்தத் தொழிலை மனிதன் செய்வானா? '' என்று புலம்பிக் கொண்டே அந்தத் தொழிலையே செய்து கொண்டிருக்கிறவர்கள் நம்மில் பலபேர் உண்டு.

செய்யும் தொழிலே தெய்வம். இப்படிச் சொல்வது எதற்காக?

அந்த அளவிற்கு அதிலே ஓர் ஈடுபாடு வேண்டும்.

ஒரு பெரிய மலைப்பகுதி. அதன் அடிவாரத்தில் ஒரு சிற்பி உட்கார்ந்திருந்து ஒரு சிலையை வடித்துக் கொண்டிருக்கிறான். கையிலே ஒரு சிறிய உளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை சிறிது சிறிதாக உடைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு சிற்பத்தை வடிப்பது என்பது அவ்வளவு சுலபமான தொழிலா? எல்லோராலேயும் அது முடியுமா? அப்படி இருந்தும் அந்தச் சிற்பிக்கு மனநிறைவு இல்லை.

அவன் நினைத்தான்.

" இந்தக் கடுமையான வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது எவ்வளவு கடினம்? நான் ஒரு சிற்பியாக இருப்பதால்தானே சூரியன் கடுமையான வெப்பக்கதிர்களை நம் மேலே வீசுகிறான். சூரியனாக இருந்து விட்டால், இந்தக் கஷ்டம் இருக்காது நம்மைக் கஷ்டப் படுத்துவபன் நம்மைவிட வலிமை உள்ளவன். அதனாலே நாம் அவனாக மாறி விடுவதுதான் நல்லது"

அவன் சூரியனாக மாறினான்.

''இனிமேல் இந்த உலகில் நம்மைவிட வலிமை உள்ளவன் வேறு யாரும் கிடையாது '' என்று நினைத்தான்.

அவனுக்கு மகிழ்ச்சி இருந்தது. அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. சிறிது நேரத்தில் ஆகாயத்தில் கரிய மழை மேகங்கள் சூழ்ந்து வந்து அவை சூழ்ந்து வந்து சூரியனை மறைத்தன.

நம்மையே மேகங்கள் மறைப்பதால் சூரியனாக இருக்கக் கூடாது. இனிமேல் மேகமாகத்தான் இருக்க வேண்டும். அதுதான் கௌரவம்..." என்று நினைத்தான்.

இப்போது சூரியனாக இருந்த சிற்பி மேகமாக மாறினான். வான வீதியில் உல்லாசமாக உலாவரத் தொடங்கினான்.

எத்தனையோ தடைகளைத் தாண்ட வேண்டி ஏற்பட்டது. மேகத்தையே போகவிடாமல் ஒரு பெரிய மலை தடுத்தது. உடனே சிற்பி நினைத்தான். மேகமாக இருந்தும் பயனில்லை... இருந்தால் மலையாகத்தான் இருக்க வேண்டும்... அதுதான் பெருமை" என்று நினைத்தது.

இப்போது மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான்.

பெரிய மலை பூமிக்கும் வானத்திற்கும் இடையில் நின்று கொண்டிருந்தது. இனிமேல் நமக்கு எந்தக் கவலையும் இல்லை என்று நினைத்தது.

இப்படியாக நினைத்துக் கொண்டிருக்கையில், அதன் காலடியில் அடிவாரத்தில் ஏதோ ஒரு பெரிய சத்தம் கேட்டது.

"என்ன சத்தம் இது? " என்று அந்த மலை மெல்ல குனிந்து பார்த்தது. அங்கே ஒரு மனிதன் உளியை வைத்துக் கொண்டு மலையைக் கொத்திக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு சிற்பத்தை வடிக்க அவன் முயன்று கொண்டிருந்தான்.

இப்போது அந்த மலை நினைத்தது, "மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால் அவன் எவ்வளவு வலிமை மிக்கவனாக இருக்க வேண்டும்...

இனிமேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாற வேண்டும். அதுதான் சரி என்று நினைத்தான்.

அடுத்த விநாடியே அந்த மலை ஒரு மனிதனாக மாறியது. அவன் கையிலே ஒரு உளி. பழையபடியே ஒரு கருங்கல் பாறையைக் கொத்த ஆரம்பித்தான்.

இதிலிருந்து ஒரு உண்மையை புரிந்து கொள்ளலாம். தன்னுடைய உண்மையான பலம் என்ன என்பது தெரியாமலே தாவித் தாவி தடுமாறி கொண்டிருக்கிறான் மனிதன்.

இனிமேலாவது நம் பலத்தைப் புரிந்து கொண்டு நேரான பாதையில் நடப்போம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே உள்ளன

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு முன்னர் அரசாங்கத்துடன் நேரடியாக பேச்சு நடத்த வேண்டும் என்று அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இதுவரை உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுக்கவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்று கூட்டமைப்பு கோரினால் அது குறித்து ஆராயலாம். எது எவ்வாறு இருப்பினும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்க் கூட்டமைப்பு இடம்பெற்றால் மட்டுமே அரசியல் தீர்வு என்பது யதார்த்தமாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முறையாக கோரும் பட்சத்தில் அது குறித்து ஆராய முடியும். காரணம் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அரசாங்கம் மூடி விடவில்லை. ஆனால், பேச்சு எனும்போது என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் என்பது குறித்து பார்க்க வேண்டும்.

அதற்காக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தாது என்று அர்த்தம் இல்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவானது அரசாங்கத்துக்கும் கூட்டமைப்பைப்புக்கும் இடையிலான சந்திப்புக்கு தடையான விடயமல்ல.

அதேவேளை, அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தால் அது குறித்து பரிசீலிக்கலாம் என அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# எழுதுமட்டுவாழ் பகுதியில் தாய்,சேய் கிளினிக் இல்லை

## கர்ப்பிணிகள் அவலம்

(சாவகச்சேரி)

மீளக்குடியமர்வு இடம்பெற்ற எழுதுமட்டுவாழ் பகுதியில் தாய், சேய் நல கிளினிக்குகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் கர்ப்பிணித்தாய்மார்களும் குழந்தைகளும் ஐந்து கிலோமீற்றருக்கு அப்பால் மிருசுவிலில் நடைபெறும் கிளினிக்குகளுக்கே செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது.

இடப்பெயர்வுக்கு முன்னர் எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு (மருதங்குளம்) ஆகிய இடங்களில் தாய்,சேய் நல கிளினிக்குகள் நடத்தப்பட்டு வந்தன.

மீளக்குடியமர்வின் பின்னர் இந்தப் பிரிவுகளில் குடும்ப நல சேவையாளர்கள் சேவையாற்றுகின்ற போதிலும் கிளினிக்குகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பிரிவுகளில் தாய்,சேய் நல கிளினிக்குகளை மீண்டும் நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினரை பொதுமக்கள் கோரியுள்ளனர். (அ-3-29)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 30 | 40 | 40 | 50 |
| தக்காளி | 120 | 110 | 100 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15-20 | 30 | 20 | 40 |
| கரட் | 40 | 60 | 40 | 70 |
| பூசணி | 20 | 20 | 25 | 40 |
| புடோல் | -- | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 15 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 70 |
| பயற்றங்காய் | 40 | 40 | 100 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 | 120 |
| பீற்றூட் | 30 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 30 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 170 | 300 | 200 |
| போஞ்சி | -- | 140 | -- | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 90 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 18-20 |

## இராசி பலன்

*09.05.2012*
*(சித்திரை 27, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*சதுர்த்தி பின்னிரவு 12.56 மணிவரை*
*மூலம் பின்னிரவு 12.40 மணிவரை*
*இராகுகாலம் 11.54-1.24 மணிவரை*
*சுபநேரம் 4.24-5.54 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*

**மேடம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு,திடீர் பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை அமையும்,குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், உற்றார், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** இல்லத்தில் நல்ல சம்பவமொன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, செல்வாக்கான நாள்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள்,அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும்,வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், கை மாற்றாக கொடுத்த பணம் கைக்கு கிடைக்கலாம்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம்,அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடரும் எண்ணம் மேலோங்கும்,வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள்.

**கன்னி** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரும் நாள்,பெற்றோர் மீது பிரியம் கூடும்,மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,வாகன சுகமுண்டு.

**துலாம்** தொழிலில் எதிர்பார்த்த நன்மைகளைப் பெறுவீர்கள்,உறவினர்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர், பயணங்களால் பலனுண்டு,சுவாரஸ்யமான நாள், புத்தி சாதுரியமாக நடந்து புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, தொழில் விருத்தியேற்படும்.

**தனுசு** ஜன வசியமுண்டு,கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்,உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்,அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மகரம்** பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், சயன சுகக்குறைவான நாள்.

**கும்பம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள்,தொலைபேசி வழித் தொடர்புகளால் நன்மையுண்டு.

**மீனம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்,போசன சுகமுண்டு.

வளவன்

# உயிர் மீண்ட காளை மாடு

2

'மாடு' என்பதற்கு செல்வம் என்றொரு பொருளும் உண்டு. ஒரு காலத்தில் மக்களின் செல்வமாக மாடு இருந்ததன் காரணமாக இப் பொருள் ஏற்பட்டிருக்கலாம்.

நிறை உணவாகிய பாலைத்தருகின்ற பசுக்கள், விவசாயச் செய்கைக்காக நிலத்தை உழுது பண்படுத்தவும், பயணத்திற்கும் பார மான பொருட்களை எடுத்துச்செல்லவும் உதவும் எருதுகள்,

கூடவே, பசளையாகப் பயன்படும் எருக்கள் என்றவாறு மனித வாழ்வின் முழுத்தேவைக ளையும் மாடுகள் மூலம் நிறைவேற்ற முடிந்தது.

இதன் காரணமாக மாடுகள் வைத்திருப்




பவர்கள் செல்வம் மிக்கவர்களாக விளங்கினர். இதனால் தமிழ் மக் களின் வாழ்வில் பசுக்களும் காளை களும் மகத்தான முக்கியத்துவத் தைப் பெற்றுக் கொண்டன.

தை மாதப்பிறப்பில் சூரியனுக்கு பொங்கிப் படைத்து நன்றி தெரிவிக்கும் தமிழ் விவசா யப் பெருமக்கள் தைத்திங்கள் இரண்டாம் நாள், தம் வாழ்வியலுக்கு பேருதவியாற்றிய மாடுகளுக்குப் பட்டிப்பொங்கல் செய்து பசு க்களையும் எருதுகளையும் வழிபாடு செய்வர்.

இது தவிர, தமிழர் வாழ்வியலில் திருமணச் சடங்கிலும் ஆலயப் பாலஸ்தாபன நிகழ்விலும் மகா கும்பாபிஷேகங்களிலும் தானம் கொடுக்கும் புண்ணிய காரியங்களிலும் மாடுகள் கொண்டுள்ள வகிபாகம் காத்திர மானது.

வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற விசேட நாட்களில் வீட்டிற்கு முன்பாக பசுக்களை கட்டிவைத்து அதிகாலை வேளை எழுந்து நல்ல முழிவளமாக பசுக்களைப் பார்



க்கும் பண்பாடு எங்கள் கிராமங்களுக்குரியவை.

இவ்வாறாக எங்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்த பசுக்களையும் காளைக ளையும் தெய்வமாக வழிபாடாற்றும் தமிழர்கள் அதன் இறைச்சியை ஒருபோதும் உண்டதாக வரலாறில்லை.

அந்நியர் ஆட்சியில் அவர்களுக்கு இறைச்சிக் காக மாட்டைக்கொடுக்க வேண்டும் என்ப தனாலும், அந்நியர்கள் மாட்டை வெட்டி இறைச்சி புசிப்பதைக் கண்டு பொறுக்க முடியாமலும் இந்த நாட்டைவிட்டு தமிழக த்துக்கு ஓடிச்சென்ற தமிழ்ச்சான்றோர்கள் வாழ்ந்த பூமி இது.

மாட்டுக்கு நீதிவழங்கிய
மனுநீதிச் சோழன்

மனுநீதிச் சோழ மன்னனின் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் குறைகளை மன்னனுக்குத் தெரி யப்படுத்துவதற்காக அப்படி ஒரு ஏற்பாடு.

எனினும் ஆராய்ச்சிமணி ஒருபோதும் அடிக்கப்படவில்லை. மக்களுக்கு குறை இல்லாத போது ஆராய்ச்சி மணியை அடிக்க வேண்டிய தேவை இல்லை அல்லவா! இருந்தும் ஒருநாள் மனு நீதிச் சோழமன்னனின் அரண் மனைவாயிலில் உள்ள ஆராய்ச்சி மணி அடிக்கப்படுகின்றது.

கணீர்... கணீர்... என்ற ஓசை கேட்டு மன்னன் மனுநீதிச் சோழன் திணுக்குற்றான்.

பசுமாடு ஒன்று தன் வாயினால் ஆராய்ச்சி மணியின் சங்கிலியை இழுத்து அடிக்கின்றது.

## மாட்டிற்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழமன்னன்

கூடவே, அதன் கண்களில் இருந்து ஆறாகப் பெருக்கெடுக்கும் கண்ணீர். வாயிற்காவலன் தகவலை மந்திரிக்குத் தெரியப்படுத்துகின்றான். ஆராய்ச்சிமணிஓசை கேட்ட மனுநீதிச்சோழ மன்னன் சம்பவம் யாது என மந்திரியிடம் வினவுகின்றான்.

எல்லா வளமும் பொருந்திய மன்னா! தங்கள் புதல்வன் வீதிவிடங்கன் தேர் ஏறிச்செல்கின்ற வேளையில் தேர்ச்சில்லில் அகப்பட்ட ஆன் கன்றொன்று நசியுண்டு இறந்து போனது.

புத்திரசோகம் தாழமுடியாமல் அக்கன்றின் தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்தது என்று மந்திரி விளக்கம் கொடுத்தார்.

இச்சம்பவத்தை விபரித்த சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புகழ்பாடும் பெரிய புராணத்தில்,

வளவ நின் புதல்வன் ஆங்கோர்
மணி நெடுந்தேர் மீ தேறி
அளவில் தேர்த்தானை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைந்த இத்தன்மை என்றான்


சம்பவத்தைக் கேள்வியுற்ற மனு நீதிச் சோழன் புத்திரசோகத்தால் கதறும் பசுவுக்கும் உயிரிழந்த கன்றுக்கும் நீதிவழங்கத் தயாரானான்.

தன் ஒரே மகன் வீதிவிடங்கனை வீதியில் கிடத்தி தானே தேரை ஓட்டி தேர்க்காலால் தன் அருமந்த புத்திரனை நசித்து கொல்கின்றான்.

மனுநீதிச்சோழனின் நீதிநெறி தவறாப் பெருந்திறத்தை உலகறியச்செய்ய நினைத்த வீதிவிடங்கப் பெருமான் கன்றையும் வீதிவிடங் கனையும் உயிர்த்தெழ திருவருள் பாலித்தார்.

மன்னர்கள் எப்படியாக அரசாட்சி செய்ய வேண்டும் என்பதற்கு மனு நீதிச்சோழன் சிறந்த எடுத்துக்காட்டு. அதன்காரணமாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மனுநீதிச்சோழ மன்னனின் உருவச்சிலையை நிறுவி அதன் கீழ் பசுமாடு ஆராய்ச்சி மணியை அடிக்கும் காட்சியையும் சித்தரித்துள்ளனர் தமிழகப் பெரியோர்.

2010 ஆம் ஆண்டில் தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி செம்மொழி மாநாட்டை நடத்தியிருந்தார். அம்மாநாடு ஆரம்பிப்பதற்கு



முன்னதாக இடம்பெற்ற ஊர்திப்பேரணியில் மனுநீதிச் சோழமன்னன் பசுமாட்டிற்கு வழங் கிய நீதியை வெளிப்படுத்தும் காட்சியைச் சித்தரிக்கும் ஊர்தியே முதன்மை பெற்றிருந்தது.

ஆக, ஆராய்ச்சி மணியை அடித்து நீதி கேட்ட பசுவுக்கு மன்னன் மனு நீதிச்சோழன் வழங்கிய தீர்ப்பு மாட்டுக்குக் கொடுத்த உன்னத மான மதிப்பைக் காட்டுவதாகவே கருத வேண்டும்.

மன்னன் மனுநீதிச்சோழன் மக்களுக்கு இணையாக மாட்டைக்கருதியது ஏன்?

(வளரும்)

விதுரன்

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் திட்ட வரைபு தயாரிக்கவுள்ளது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ள என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் திட்ட வரைபொன்றை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

குறுகியகாலம், இடைக்காலம், நீண்டகாலம் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான திட்டவரைபு தயாரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்று சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து வெளிவிவகார அமைச்சு இத்திட்ட வரைபைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்திருக்கிறது.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்துக்களை அரசாங்கம் எழுத்து மூலம் கோரியிருந்தது.

சில கட்சிகள் தமது கருத்துக்களை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உரும்பிராய் இந்து மாவட்ட சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப்போட்டியில் 19 வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி முதலாமிடத்தைப் பெற்றுச் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியினைத் தோற்கடித்து உரும்பிராய் இந்துக்கல்லூரி அணியினர் சம்பியனாகினர்.

இதில் த.நிதியா, ந.வதனா, சு.துஷி ஆகிய வீராங்கனைகளே சம்பியன்களாக தெரிவாகினர்.

(அ-9)

# மக்களின் பிரச்சினைகளிலிருந்து நழுவி செல்ல அரசு முனைப்பு

## ஊடகப் பேச்சாளர் கருணாதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து நழுவிச் செல்லக்கூடிய வகையிலேயே அரசாங்கம் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கும் போது நிலையான பொருளாதார கொள்கைகளை கடைப்பிடிப்பதில்லை. உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதாக அரசாங்கம் கூறி வருகிறது.

அதுபோல கோதுமை மாவின் விலையை அதிகரிக்கும் போது அரசாங்கம் கூறும் காரணம் உள்நாட்டு நெல் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்றோம் என்பதாகும். புத்த பகவான் தோன்றிய காலத்தில் ஏழு புத்திஜீவிகள் இருந்தனர். அவர்களில் சஞ்சயபெல்லட்டி புத்த என்பவரும் இருந்தார்.

அவரின் நடவடிக்கைகள் அனைத்தும் பொறுப்புக்களை தட்டிக்கழிக்கும் வகையில் நழுவிச் செல்லக்கூடிய தன்மையாக இருந்தது. அதேபோன்று மக்கள் மீது வரிச்சுமைகளை சுமத்தி திட்டமிடாத கொள்கைகளையே முன்னெடுத்து வருகின்றது. (அ-2)

# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவுக்கு வடக்கு, கிழக்கிலிருந்து யாத்திரை

(கொழும்பு)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டிய பாதயாத்திரை வழமைபோல் இம்முறையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இம்முறை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் எதிர்வரும் 18 இல் ஆரம்பிக்கும் பாதயாத்திரையானது எதிர்வரும் ஜூலை மாதம் 18 இல் கதிர்காம கொடியேற்றம் நடைபெறும் தினத்தன்று சென்றடையவிருக்கிறது.

காரைதீவைச் சேர்ந்த வேல்சாமி தலைமையில் இருமாத காலம் இடம்பெறும் இப்பாத யாத்திரை கடந்த பல வருடங்களாக வெருகல் முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவான ச.மகேஸ்வரன் என்பவரே வேல்சாமி ஆவார்.

இப்பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வெள்ளிவிழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வுநிறுவனத்தினால் அதன் வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன என ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் யாவும் மாகாணக்கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் வலய மட்டத்தில் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது எனவும் பாடசாலை இரண்டாம் தவணை காலப்பகுதியிலேயே போட்டிகள் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளுக்கான தலைப்புகள் யாவும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவைகளை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் ஏ்னவும் அதுபற்றிய விபரங்களை அறிய விரும்பும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

## சஜித் பிரேமதாச சவால்

(கொழும்பு)

அரசாங்கம் மீண்டும் மூன்று மாகாண சபைகளைக் கலைத்து கட்டம் கட்டமாக தேர்தலை நடத்த முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு தேர்தலையும் எவ்வேளையிலும் எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் தற்போதைய அரசாங்கத்தை தோல்வியடையச் செய்யும் முதற்படியாகவே நடைபெறவுள்ள தேர்தல் அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மை பலம் அரசாங்கத்திடம் இருக்குமாயின் எதற்காக கட்டம் கட்டமாக தேர்தலை நடத்த முயற்சிக்கின்றார்கள் என சஜித் பிரேமதாச இதன்போது கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய தேசியக்கட்சி என்ற வகையில் தாம் ஒன்றிணைந்து இந்த சவாலை எதிர்நோக்க தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்து அரசாங்கத்தின் அதிர்ஷ்டத்தை திசைதிருப்ப தயாராக இருப்பதாகவும் கட்சியின் பிரதித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் மீது வாழ்க்கைச் சுமையைச் சுமத்தி அவர்களை சிரமத்திற்கு ஆளாக்கி வாழ முடியாதளவு மக்கள் சிரமங்களை எதிர்கொள்ளும் ஒரு யுகத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

மலேரியா அற்ற இலங்கை - 2014

மலேரியா விழிப்புணர்வு நடைப்பேரணி

11.05.2012 காலை 9.30 மணி

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

செய்தி

மலேரியா காணப்படும் நாடுகளுக்கு செல்லுமுன்


மலேரியாவிற்கான பாதுகாப்பு சிகிச்சையை பெற்றுக் கொள்வோம்;

மலேரியா விழிப்புணர்வு கண்காட்சி

11.05.2012 காலை 10.30 மணி யா/இந்துக் கல்லூரி

# கில்னர் ஒழுங்கை வாய்க்காலை விரைவில் புனரமையுங்கள்

## மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கையில் வாய்க்கால்கள் புனரமைக்கும் பணிகள் தாமதமடைவதால் அவ்வீதியினூடாக பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதோடு வாய்க்கால்களும் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வாய்க்கால் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இற்றை வரை அதன் வேலைகள் நிறைவடையவில்லை.

வீதிக்கு குறுக்காக காணப்படும் இரு வாய்க்கால்களில் ஒன்று முற்றாக புனரமைக்கப்படாமையாலும் மற்றையது அரைகுறையாக புனரமைக்கப்பட்டு காணப்பட்டதாலும் குறித்த வீதியிலுள்ள மீனாட்சி அம்மன் கோவில் ஊர்வலமும் இம்முறை இவ்வீதியின் சேதத்தால் தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வாய்க்கால்கள் சேதமடைந்து காணப்படுவதால் சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்ற போதும் அவற்றை துரிதப்படுத்தி புனரமைத்து மக்களின் பாவனைக்கு ஏற்றவாறு தருமாறு பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுகின்றனர். (அ-2-4)




# போலிக்காசோலையை கொடுத்து ஏமாற்றிய நபர்

## யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களினை வாங்கிவிட்டு பணத்தினை கொடுக்காமல் காசோலையினை கொடுத்து விட்டு வங்கியில் பணத்தை வைப்புச் செய்யாமல் ஏமாற்றியவர் மீது யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் 4 இலட்சத்து 85 ஆயிரம் பெறுமதியான மின்னியல் உபகரணங்களினை மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தினை சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் நல்லூரினைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார்.

இதற்காக தனது காசோலையினை குறித்த வர்த்தகருக்கு வழங்கியுள்ளார். காசோலையினை வாங்கியவர் வங்கியொன்றிற்கு சென்று காசோலையினை பணமாக மாற்றுவதற்காக வைப்புச் செய்தபோது வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படவில்லை, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த குறித்த வர்த்தகர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

காசோலை வழங்கிய குறித்த வர்த்தகர் யாழ். நகரில் தொலைபேசி விற்பனை நிலையமொன்றை நடத்திவருகின்றார் என்றும் இதேபோன்று ஏற்கனவே மூவரினை ஏமாற்றி உள்ளார் என்றும் பாதிக்கப்பட்டவர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# காசநோய்த் தொற்று அதிகரிப்பு; கட்டுப்படுத்த வளப்பற்றாக்குறை

## யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கே காசநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் அவற்றின் தாக்கம் இன்று வரை தொடர்வதாகவும் யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் ஜமுனாநந்தா தெரிவித்தார்.

இறுதிக்கட்ட போரின்போது கைது செய்யப்பட்டு பெருமளவானவர்கள் ஒரு சிறிய தடுப்பு முகாம்களில் தடுதது வைக்கப்பட்டமையால் இந்நோய்த்தொற்று அதிகமாக காணப்பட்டுள்ளது.

இந்நோய் குறித்த விழிப்புணர்வுகள், தடுப்பு முகாம்களில் வழங்கப்படவில்லை.

யாழ். சிறைச்சாலையிலும் இவ்வருட முற்பகுதியில் காசநோய் தொற்றுக்குள்ளான 3 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் போதைவஸ்து பாவனைக்கு அடிமை யானவர்.

காசநோய் தொற்று உள்ளவர் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைத்தல், போதைவஸ்து பாவனைக்கடிமையானவர்களினை தடுத்து வைத்திருத்தல், வெளிமாவட்டங்களினை சேர்ந்தவர்களினை வேலைக்கு அமர்த்துதல் போன்ற காரணங்களால் காசநோய்த்தொற்று ஏற்பட வாய்ப்பாக அமையலாம்.

எனினும் தென்பகுதி சிறைச்சாலைகளினை விட யாழ். சிறைச்சாலையில் காசநோய் தாக்கம் என்பது மிக மிக குறைவாகும்.

போதைவஸ்திற்கு அடிமையானவர்களிடத்தில் காணப்படுகின்ற காசநோய் தொற்று மிகவும் ஆபத்தானவை. அவர்களினை ஏனையவர்களிடத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும்.அல்லது அவர்களுக்கான சிகிச்சைகளினை தடுப்பு முகாம்களிடையே மேற்கொள்ளல் வேண்டும்.

காசநோயினை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சில காசநோய் வைத்தியசாலைகள் திறக்கப்படாமையும் ஒரு காரணமாகவுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வோடு மூடப்பட்ட மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை இன்றும் திறக்கப்படவில்லை. அது தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் காணப்படுகின்றது.

இதனைத் திறப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் எமது அரசியல்வாதிகளோ, உயர் அதிகாரிகளோ இதுவரை எடுக்க வில்லை. மத்திய அரசிற்கு கீழ் காணப்படும் வைத்தியசாலையினை திறப்பதற்கு மத்திய அரசும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென் மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள்

யாழ். பிராந்திய இரத்த வங்கியினால் குருதிக்கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு இரத்ததானம் சம்பந்தமான விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில் இரத்ததானமும் இரத்ததானத்திற்கான தேவைகளும் எனும் எண்ணக்கருவிலான கவிதை, சிறுகதை, சித்திரப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக இரத்த வங்கிப் பிரிவு அறிவித்துள்ளது.

இப்போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி, திறந்த போட்டி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிவோரும் அவர்களைச் சார்ந்தோரும் பங்குபற்ற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான கவிதை 48-96 வரிகளிலும் சிறுகதை ஏ4 தாளில் 4-8 பக்கங்களில் அமைந்திருப்பதுடன் தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பாவித்து தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டெழுத்துப் பிரதியாகவும் அனுப்பிவைக்க முடியும்.

12 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தற் கடிதத்துடனும், வயது எல்லை இன்றி திறந்த போட்டியாளர்களும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிராந்திய இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஆனி மாதம் 14 ஆம் திகதி உலகக் குருதிக் கொடையாளர் தினமாகும். இதன் பிரகாரமே ஆனி மாதம் 16 ஆம் திகதி இலங்கை முழுவதும் குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் வடமராட்சி மீள்குடியேற்ற கிராமங்கள்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, முள்ளியான் வெற்றிலைக்கேணி, கேவில் போன்ற பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் இதுவரை அங்கு மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் எதுவும் உரிய அதிகாரிகளினால் நிறைவேற்றிக்கொடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் உள்ள மேற்குறித்த பகுதிகள் யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் தமது இருப்பிடங்களையும் உடைமைகளையும் விட்டு வன்னி மற்றும் ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அப்பகுதி மக்களுக்கு இதுவரை அடிப்படை வசதிகள் கூட செய்து கொடுக்காமல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது அப்பகுதி மக்கள் உரிய வைத்திய தேவைகளையும் போக்குவரத்து, மின்சாரம், கல்வி மற்றும் ஏனைய தேவைகளை பெறமுடியாமல் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே அப்பகுதி மக்களின் நலன்கருதி உரிய அதிகாரிகள் உதவ முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# வைத்தியருக்காக காத்திருக்கும் மணற்காடு பிரதேச வைத்தியசாலை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு பிரதேச வைத்தியசாலை 5 வருடங்களுக்கு முன்னர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் இதுவரை அங்கு வைத்திய சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மணற்காடு பிரதேசம் யுத்தத்தாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட இடமாகும்.

யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இவ்வைத்தியசாலை இயங்காமைக்கு மக்கள் பல கிலோ மீற்றர் தூரமுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கே பல சிரமங்கள் மத்தியில் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

மணற்காடு பிரதேச வைத்தியசாலையில் தற்போது ஒரு மாதத்தில் ஒரு சில தினங்களே கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கான கிளினிக் இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வைத்தியசாலையை ஏனைய பிரதேச வைத்தியசாலைகள் போல் இயங்க வைக்க உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# அரசாங்கத்தின் நடவடிக்கையினால் தொழிற்சங்க பணிகளுக்கு இடையூறு

## தொழிற்சங்க சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமது தொழிற்சங்க பணிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தாம் சர்வதேச தொழிற்சங்க அமைப்பிற்கு முறையிட தீர்மானித்துள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க நடவடிக்கைகள் காரணமாக தொலைத் தொடர்பு, சுகாதாரம், வங்கிச் சேவைகள் போன்றவற்றின் ஊழியர்களினால் தமது உரிமைகளை தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர தொழில் தொடர்பான பிரச்சினைகளை விசாரிப்பதற்கான அதிகாரம் குடியியல் நீதிமன்றங்களுக்கு இல்லை என்ற சர்வதேச சட்டம் மீறப்படுவதாகவும் சம்மேளனத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தொழில் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கு அரசாங்கத்தின் தலையீடு காரணமாக நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது. இப்படியான உத்தரவினை பெறுவதற்கான சட்ட ரீதியான அதிகாரம் இல்லை.

1935 ஆம் ஆண்டு தொழிற்சங்க சட்டத்தின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு குடியியல் நீதிமன்றத்திற்கு கடற்பாடு இல்லை என அவர் தெரிவித்தார். (அ-2)

# தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் இணைந்த பின் பணிகள் ஆரம்பமாம்

## அமைச்சர் நிமால் சிறிபால தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் தமது பிரதிநிதிகளை நியமித்ததன் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

துரிதகதியில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை பெயரிட்டால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் ஜே.வி.பி. இன்னமும் தீர்மானிக்கவில்லை. தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பங்கேற்கச் செய்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, அரசாங்கம் மெய்யாகவே தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க ஆர்வம் காட்டுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# பிரதியமைச்சர் பதவிக்கு முண்டியடிக்கும் எம்.பிக்கள்

(கொழும்பு)

இலங்கையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மாகாண சபைகளில் முன்னர் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள். சிறிய கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட ரீதியில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுமா என எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

எதிர்வரும் வாரங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திகாம்பரம், பிரபா கணேசன், சனத் ஜயசூரிய, நிசாந்த முத்து ஹெட்டிகம, சரத் வீரசேகர, ஹேமல் குணசேகர உள்ளிட்ட சிலருக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# முச்சக்கரவண்டி பயணத்தில் புதிய கட்டுப்பாடு விதிப்பு

முச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் போது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சாரதிக்குப் பின் ஆசனத்தில் கட்டாயமாக மூவர் மாத்திரமே பயணிக்க முடியும் என பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த விபத்துக்களைக் கருத்தில் கொண்டே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆறு இலட்சத்து 70 ஆயிரம் முச்சக்கரவண்டிகள் தற்போது இலங்கையில் பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 2012.05 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1502 - கொலம்பஸ் புதிய உலகிற்கான தனது கடைசிப் பயணத்தை (1502-1504) ஸ்பெயினில் இருந்து தொடங்கினார்.

★ 1671 - ஐரிஷ் இராணுவ அதிகாரியான தோமஸ் பிளட் லண்டன் கோபுரத்தில் ஆங்கிலேய அரச நகைகளைக் களவெடுக்க முனைந்த போது கைது செய்யப்பட்டான்.

★ 1874 - குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி மும்பை நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1901 - அவுஸ்திரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்பேர்னில் திறந்து வைக்கப்பட்டது.

★ 1914 - துடுப்பாட்டத்தில் 3000 முதற்தர விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பெருமையை ஜாக் ஹேர்ண் பெற்றார்.

★ 1919 - இலங்கையில் முதன்முதலாக உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பாவனை மாதமொன்றிற்கு சராசரியாக 30 ஆயிரம் தொன் இலிருந்து 20ஆயிரம் ஆகக் குறைக்கப்பட்டது.

★ 1920 - போலந்து இராணுவம் உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றிய வெற்றி நிகழ்வு கிரெசாட்டிக் நகரில் இடம்பெற்றது.

★ 1927 - கன்பராவில் அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் திறந்துவைக்கப்பட்டது.

★ 1933 - மகாத்மாகாந்தி தனது சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.

★ 1936 - இத்தாலி அடிஸ் அபாபா நகரை மே 5 இல் கைப்பற்றிய பின்னர் எரித்திரியா, எதியோப்பியா, இத்தாலிய சோமாலிலாந்து ஆகிய நாடுகளை இணைத்து இத்தாலிய கிழக்கு ஆபிரிக்கா என்ற நாடு உருவாகியது.

★ 1940 - இரண்டாம் உலகப் போர்: டென் ஹெல்டர் என்ற இடத்தில் பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பலை ஜேர்மனிய யு-9 நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்தது.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் யு-110 நீர்மூழ்கிக் கப்பலை பிரித்தானியக் கடற்படையினர் தாக்கிக் கைப்பற்றினர்.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேயினில் சின்கிவ் நகரில் 588 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் வெற்றி தினத்தை கொண்டாடியது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் கடைசி ஜேர்மன் படைகள் சோவியத் தளபதி கியோர்கி சூக்கொவ் இடம் சரணடைந்தனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் நிலை கொண்டிருந்த ஜேர்மனிய படைகள் நிபந்தனை இன்றி சரணடைந்தனர். சிலொவேனியாவில் போர் முடிபுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய இராணுவத் தளபதி ஹேர்மன் கோரிங் அமெரிக்க இராணுவத்தால் கைப்பற்றப்பட்டான்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நோர்வேயின் ஜனாதிபதியாக இருந்த விட்குன் உயிஸ்லிங் நோர்வேயில் கைது செய்யப்பட்டார்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் பிராக் நகரை அடைந்தன.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: கால்வாய் தீவுகள் பிரித்தானியரால் விடுவிக்கப்பட்டன.

★ 1955 - பனிப்போர்: மேற்கு ஜேர்மனி நேட்டோவில் இணைந்தது.

★ 1956 - உலகின் 8 ஆவது உயரமான மலையான மனஸ்லுவின் உச்சி முதன் முதலாக ஜப்பானிய மலையேறிகளால் எட்டப்பட்டது.

★ 1980 - புளோரிடாவில் லைபீரியாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் பாலம் ஒன்றில் மோதியதில் பாலம் சேதமடைந்ததில் 35 பேர் உயிரிழந்தனர்.

★ 1985 - காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

★ 1987 - போலந்து பயணிகள் விமானம் வார்சாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 183 பேர் உயிரிழந்தனர்.

★ 1988 - கன்பராவில் அவுஸ்திரேலியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

★ 2002 - ரஷ்யாவில் காஸ்பீஸ்க் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 43 பேர் உயிரிழந்தனர்.


★ 2004 - செச்னியா ஜனாதிபதி அகமது காதீரொவ் கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்தார்.

### பிறப்பு


★ 1408 - அன்னமாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் (இ.1503)

# யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புத்தாண்டு விழாவும் சான்றோர் கௌரவிப்பும்


## சமூக திலகம் பட்டம் பெற்றோர்




கலாநிதி நா.நாகேந்திரன் தலைவர் , சமாதான நீதவான்
யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு.சமன் சிகேரா



தேசபந்து.க.கு.க.சிவபாலன் அவர்கள் பிரபல
வர்த்தகரும் சைவப்பெருமகனும்




நடராசா கணேசமூர்த்தி ஆசிரியர் ,
ஊடகவியலாளர்




அ.யூட் யாழ்.பிரதம செயலக கிராம
அபிவிருத்தி உத்தியோகத்தர்




கந்தவேள் யாழ். பிரதேச செயலக
கலாசார உத்தியோகத்தர்




பஞ்சநாதன் சுதர்சன் ஆங்கில ஆசிரியர்,
சமூக சேவையாளர்




லயன் தியாகராசா தேவராசா சமாதான
நீதவான், பிரபல வர்த்தகர்




திருமதி சரோயினி இளங்கோவன் ஓய்வு பெற்ற
நீதிபதியும் சட்டத்தரணியும்




கிருஷ்ணபிள்ளை மகாலிங்கம் J/83 ஓய்வுபெற்ற
கிராம அலுவலர்



பிரபல சோதிடர் கதிரேசு சாம்பசிவம் Dr.சி.யமுனா
நந்தா யாழ். மாவட்டகாசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி



பேராசிரியர், வைத்திய கலாநிதி ஜெ.ஜெயலன்




ஆலய குருக்கள்
சுப்பிரமணியக் குருக்கள் பாலச்சந்திர சர்மா



J/83 கிராம அலுவலர்
திருமதி.கலாநிதி



நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்



சனசமூகத்தலைவர் விளையாட்டில் பங்கு
பற்றிய மாணவனுக்கு பரிசு வழங்குகிறார்



சனசமூகத்தலைவரும் கிராம அபிவிருத்தி சங்கத்
தலைவரும் மங்கல விளக்கேற்றுதல்

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 125

முன்னேறித் தாக்கிய சோவியத் துருப்புகளை தடுத்து நிறுத்த முடியும் அல்லது இவற்றை துனாய் ஆற்றின் பின்னால் தள்ளக்கூட முடியும் என்று கருதி புடாபெஸ்ட் பிரதேசத்தில் டாங்கி மற்றும் மோட்டார் டிவிசன்களைக் குவிப்பதற்கு பெரும் முக்கியத்துவம் அளித்த ஜேர்மனியப் படைத் தலைமை இது நடைபெறாத போது பெரும் வியப்படைந்தது. "கிழக்கத்தியப் போர்முனையில் இது வரை எங்குமே காணப்படாத அளவிற்கு ஹங்கேரியில் திரட்டப்பட்டிருந்த கவச டாங்கிப்படையின் உதவியால் எதிரியை ஏன் தடுத்து நிறுத்த இயலவில்லை என்பது எனக்குப்புரியவில்லை" என தரைப்படைகளின் பிரதான படைத் தலைமையகத் தளபதி குடேரியான் புடா பெஸ்ட் அருகே நடந்த சண்டை

இவ்வளவு நேரம் எதற்கும் ஆனதில்லை என்று கூறுவதே போதுமானது.

ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற சண்டைகளில் பல்வேறு விதமான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ள சோவியத் துருப்புகள் பலத்த தற்காப்பைப் பிளந்து சென்றன, பெரும் ஆறுகளை போகிற போக்கில் கடந்தன, நீண்ட தூரத்திற்கு எதிரியைத் துரத்திச்சென்றன, மலைகளிலும் பெரும் குடியிருப்பு மையங்களிலும் சண்டையிட்டன. சாதாரணமாக துருப்புகள் பரவலான தாக்குதல் மண்டலங்களையும் ஒப்பீட்டளவில் சக்திகள் மற்றும் சாதனங்களையும் குறைவான அடர்த்தியையும் பெற்றிருந்த போதிலும் இத்தகைய சூழ்நிலைகளில் இவை உயர்வான போர்த் திறமை, ஆண்மை, வீரத்தை வெளிப் படுத்தி பெரும் வெற்றிகளை அடைந் தன.



புடாபெஸ்ட் வீதியில் யுதப்-பெண்கள் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படும் காட்சி-பின்பு இவர்கள் நச்சு வாயு முகாம்களில் கொல்லப்பட்டு எரியூட்டப்பட்டனர்

கொல்லப்படுவதற்கு முதல் 60 இலட்சம் யுதமக்கள் ஆயுதப்படைகளால் கேட்டோஸுக் உள் இழுத்துச் செல்லப்பட்ட நாளை வருடாவருடம் நினைவுகூறும் ஹங்கேரியமக்களின் *நினைவு நடை*- இந்நிகழ்வு 2012-ல் நடந்ததுள்ளது.




களின்போது தனக்குக் கூறியதாக தெற்குப்படைத் தொகுதியின் தளபதி பிரீஸ்னெர் 1944 லிலும் 1945 தொடக்கத்திலும் ருமேனியாவிலும் ஹங்கேரியிலும் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து தான் எழுதிய நூலில் குறிப்பிட்டான்.

துப்பாக்கிப்படை டிவிசனுக்கும் துனாய் இராணுவ ப்ளீட்டுக்கும் இடையே திட்டவட்டமான பரஸ்பர செயலாக்கம், துருப்புகளை தொடர்ச்சியாக வழிநடத்தியது, இடையறாது இராணுவ சப்ளைகளை அனுப்பியது ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தது

திசையில் தாக்குதலுக்கான தயாரிப்பில் இறங்கின. ஆனால், இப்பிரதேசத்தில் நிலவரம் மீண்டும் கூர்மையடைந்தது. பெப்ரவரி நடுவில் பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை எதிர்த்தாக்குதலைத் தொடுப்பதற்காகப் பெரும் சக்திகளைக் குவித்தது. டாங்கிகள் மற்றும் திடீர்த் தாக்குதல் பீரங்கிகளில் எதிரி 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை 2.1 மடங்கு விஞ்சி நின்றான். பல்ட்டோன் ஏரி பிரதேசத்தில் சோவித் துருப்புகளை முறியடித்து துனாய் ஆற்றோரமாக தற்காப்பைப் புனரமைத்து ஹங்கேரிய எண்ணெய் ஊற்றுகளைத் தன்வசம் தக்கவைத்து ஆஸ்திரியா மற்றும் தெற்கு ஜேர்மனியின் தொழிற்துறைப் பிரதேசங்களை எதிரிநோக்கிய அபாயத்தை அகற்றுவது என்று பாசிச ஜேர்மனியப்படைத் தலைமை திட்டம் தீட்டியது. இந்த எதிர்த் தாக்குதலில் பாசிஸ்டுகளுக்கு அரசியல் நோக்கமும்- பால்கனை சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்கும் இடையே பகடைக்காயாகப் பயன்படுத்துவது- இருந்தது. வியென்

பிரதான படைத் தலைமையகம் 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு கட்டளையிட்டது.

1945 மார்ச் 6 ஆம் திகதி பாசிஸ்டுகள் எதிர்த் தாக்குதலில் இறங்கின. 10 நாட்களுக்குக் கடுமையான சண்டைகள் நடைபெற்றன. பலத்த, 25-30 கி.மீ. ஆழத்திற்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்த தற்காப்பை சந்தித்த எதிரிக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டன. எனவே, மார்ச் 15 ஆம் திகதி தாக்குதலைக் கைவிட்டு தற்காப்பிற்கு மாறிச்செல்லும்படி எதிரி நிர்ப்பந்திக்கப்பட்டான். எதிரி துருப்புகளின் மனநிலை மிகவும் மோசமடைந்தது.

1945 ஆம் ஆண்டு மார்ச்சில் பல்ட்டோன் ஏரி பிரதேசத்தில் எதிரியின் எதிர்த் தாக்குதலை முறியடித்ததானது, யுத்தத்தின் போக்கில் சோவியத் இராணுவத்தின் கடைசி பெரும் தற்காப்பு நடவடிக்கையாக இருந்தது.

எதிரி தனது துருப்புகளை ஒழுங்கு படுத்தி வலிமையடையும் வாய்ப்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

புடாபெஸ்ட் நடவடிக்கைக்கு, இரண்டு சேனைகளிலும் இருந்த போர்வீரர்கள், இராணுவ அதிகாரிகள், ஜெனரல்களின் பெரும் உடற்பலமும் தார்மீக சக்தியும் தேவைப்பட்டன. 1944- ஆம் ஆண்டின் தாக்குதல் நடவடிக்கை எதிலுமே சோவியத் துருப்புகள் புடாபெஸ்ட் நடவடிக்கையில் சண்டை யிட்டதைப் போல் கடுமையான தற்காப்புச் சண்டைகளை இட்டதில்லை. பெரும்

டனுப் ஆற்றங்கரையில் நூற்றுக்கணக்கான யூதர்களின் உயிர்களைக் காப்பாற்றிய வாலன் பெர்க் என்ற ஹங்கேரிய வீரனின் நினைவிடம்



எதிரியின் படைத்திரட்டை சுற்றி வளைத்து அதை ஒழித்துக்கட்டுவதற்கு ஆன நேரத்தைப்போல்

கவனிக்கத்தக்கது.

ஹங்கேரியப் பரப்பில் நடைபெற்ற சண்டைகளில் கணிசமான அளவு டாங்கி மற்றும் இயந்திரப்படைத் துருப்புகள் பங்கேற்றன. தெப்ரேத்சன் மற்றும் புடாபெஸ் நடவடிக்கைகளில் 6-வது கார்டு டாங்கிப்படை தனி மண்டலத்தில் முதல் படை வரிசையில் நின்று தாக்கியது. எதிரியின் தற்காப்பிலிருந்த பலவீனமும் இடத்தின் விசேட தன்மையுந்தான் இதற்கான முக்கிய காரணங்களாகும். பெரிய தொழிற்துறை நகரில் போரிடுவதில், குறிப்பாக திடீர்த் தாக்குதல் பிரிவுகளைப் பயன்படுத்துவதில் சோவியத் துருப்புகளுக்கு நல்ல அனுபவம் கிடைத்தது.

புடாபெஸ்ட் நடவடிக்கையை முடித்த 2-வது,3-வது உக்ரேனிய சேனைகளின் துருப்புகள் வியென்னா

இந்நிகழ்வு 2012-ல் நடந்தநினைவு நடை நிகழ்வின் இறுதியில் அரச அதிபரின்உரையை செவிமடுக்கும் மக்கள்-உரையில் அவர் வாலன் பெர்க் வீரன் மட்டுமல்ல உலகம் அறிந்த மனிதாபிமானி என்று குறிப்பிடுகிறார்




னாவை நோக்கிய திசையில் தாக்குதலுக்கான தயாரிப்புகளை நிறுத்தாமலேயே தற்காலிகமாகத் தற்காப்பிற்கு மாறி, எதிரியின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டை அலைக்கழித்து பலவீனப்படுத்துமாறு உயர்மட்டப்

பைத் தராமல் 3-வது, 2-வது உக்ரேனிய சேனைகள் மறுநாளன்றே வியென்னா திசையில் தாக்குதலில் இறங்கி ஏப்ரல் 4 ஆம் திகதி ஹங்கேரியை பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து முழுமையாக விடுவித்தன. (தொடரும்)

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**கோடி நன்மைகள் தேடிவரும்!**

**தைரியமும், தன்னம்பிக்கையும் கொண்டு தக்கவிதத்தில் வாழ்க்கை நடத்தும் மேட இராசி நேயர்களே!**

எந்த காரியத்தையும் சீக்கிரத்திலேயே நீங்கள் செய்துமுடிப்பீர்கள். அதன் முடிவைப் பற்றி கவலைப்பட மாட்டீர்கள். ஆன்மபலம் உங்களுக்கு அதிகம் உண்டு. அதனால்தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லி பிடிவாதம் செய்யும் குணமும் பெற்றிருப்பீர்கள்.

உங்களுக்கு எவ்வளவு வேலை இருந்தாலும் மற்றவர்கள் உங்களை நாடிவந்து, "நீங்கள்தான் இதை முடித்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் அடுத்த கணம் புயலாகப் புறப்பட்டு செயலாற்றி முடித்த செய்தியோடு வந்துசேர்வீர்கள்.

இராஜகிரகத்தின் உச்சத்திற்கு இடம்கொடுக்கும் இராசி உங்கள் இராசி என்பதால் அரசியல்வாதிகளின் அரவணைப்பும் அரியணை ஏறும் யோகங்களும்கூட உங்களுக்கு அமையும்.

இத்தகைய மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு ஜென்மத்தில் சஞ்சரித்துவந்த குருபகவான் 17-05-2012 முதல் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் 2-ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் வாக்கு வளம் ஏற்படுமா? வசதிகள் பெருகுமா? தனவரவு தாராளமாக வந்து சேருமா? குடும்ப முன்னேற்றம் கருதிஎடுத்த முயற்சிகள் குழப்பமின்றி நிறைவேறுமா? என்பதைப் பற்றியெல்லாம் உங்கள் சிந்தனை ஓட்டம் இருக்கும்.

## மேஷம்



தெசாபுத்திகளை நடத்தவேண்டும். அப்போதுதான் ஒருமித்த பலன் உங்களைத் தேடி வந்துசேரும். வங்கியில் பணம் இருந்தும் அதனை எடுத்து அனுபவிக்கும் விதத்தில் உடல்நலம் இல்லாவிட்டால் பலன் கிடைக்காது அல்லவா? அதைப்போல் ஒரு காரியத்தை செயற்படுத்த கோச்சாரமும் சுயஜாதகமும் சேர்ந்து ஒத்துழைப்பு செய்ய வேண்டும்.

உங்கள் இராசியை விட்டு 2- ஆம் இடம் எனப்படும் தனஸ்தானத்திற்கு செல்லும் குருவை வரவேற்க முன்னதாகவே சிறப்பு வழிபாடுகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே ஞாயிறும் அவிட்ட நட்சத்திரமும் கூடும் நன்நாளில் நடைபெறும் ஹோமங்களில் நீங்கள் கலந்துகொண்டு குரு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் அதுபோன்ற நாள் நட்சத்திரங்கள் இணையும் பொழுது குரு பரிகாரம் செய்துகொள்வதன் மூலமும் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எல்லையில்லாத நன்மைகளும் வந்துசேரும்.

கவலைகள் தீர வேண்டும் என்றால் கவசங்கள் பாடி வழிபாடு செய்ய வேண்டும். எனவே"வானவர்க்கு அரசனான 'வளம் தரும் குருவே" என்ற கவசத்ந்த சந்நிதியில் பாடி முல்லைப் பூமாலை அணிவித்து மஞ்சள் வஸ்திரம் சாற்றி கடலை நெய்வேத்தியம் செய்து கொடுத்து குரு பெயர்ச்சி யாவதற்கு முன்னரே நீங்கள் வழிபாடு செய்தால் வளர்ச்சிமீது வளர்ச்சி ஏற்பட்டு வசதி அதிகரிக்கும்.

பொதுவாக 2-ஆம் இடத்திற்கு வரும் குரு திரண்ட செல்வத்தை வழங்கும் என்பார்கள். எனவே நீங்கள் பணமழையில் நனையப் போகிறீர்கள்.

### வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை

பொதுவாக 2-ஆம் இடத்திற்கு வரும் குரு வறண்ட காலத்தை வசந்த காலமாக மாற்றும். பரந்த மனப்பான்மையுடன் செயற்பட்டு பதவிகளையும் கிடைக்க வைக்கும். மறந்து செயற்படமுடியாத காரியங்களை எல்லாம் மறுசீலனை செய்து செயற்படுத்துவீர்கள்.

"இரண்டில் குரு வந்தால்
இல்லத்தில் மகிழ்ச்சி வரும்!
திரண்ட செல்வத்துடன்
தேனான வாழ்வமையும்!
உறவினர்கள் பகை மாறி
உற்சாகம் குடிகொள்ளும்!
குருவின் வழிபாட்டால்
குதூகலமாய் வாழ்ந்திடலாம்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அளவாவது பலன் கிடைக்க வேண்டும். எனவே குருவை வழிபட்டு அதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் 2- ஆம் இடம் வலுப்பெறும்போது வாக்குவாதம் செய்தவர்கள் சரணடைவர். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிபெறும். குடும்பத்தினரின் தேவைகள் பூர்த்தியாகும்விதத்தில் உங்களுக்கு பொருளாதாரநிலை மேலோங்கும். அதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுத்து உதவி செய்வீர்கள்.


இப்படிப்பட்ட ஆதிபத்தியங்களுக்கு அதிபதியான குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. விதியை மாற்றுகிற ஆற்றல் வியாழனின் பார்வைக்குண்டு. அதன்படி எதிர்ப்பு, வியாதி, கடன், வழக்கு, உடல்நிலை, இடமாற்றம், தொழில் மாற்றம் போன்ற அனைத்திலும் மனதிற்கு பிடித்தவிதத்தில் மாற்றங்களைக் கொடுக்கப் போகிறார்.

கடன்சுமை குறையும். கவலைகள் மாறும். கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும். ஆரோக்கியத்தில் இது வரை இருந்த தொல்லைகள் இனி அகலும். உற்றார் உறவினர்கள் உங்களது முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். இந்தநேரத்தில் பொன்-பொருள் வாங்கி சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

மாற்றுக் கருத்து உடையவர்கள் மனம்மாறி உங்கள் வீட்டுத் தேவைகள் பூர்த்திசெய்து கொடுப்பார்கள். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு அனைத்து காரியங்களும் நிறைவேறும்.

குருவின் பார்வை பலத்தால் செய்யும் செயல் ஸ்தானம் புனித மடைவதால் செயல்களில் வெற்றிகிட்டும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். எல்லையில்லாத அளவிற்கு வருமானம் உயரும். புதிய தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். புதிய இடம் வாங்கி மனை கட்ட வேண்டும் என்று நீங்கள் கண்ட கனவு கண்டிப்பாக நிறைவேறும்.

அப்படிப்பட்ட குரு இந்தமுறை பெயர்ச்சியாகும்போது பகைக் கிரகமான சுக்கிரன் வீட்டில் சஞ்சரிப்பதாலும் கேதுவுடன் கூடியிருக்கப் போவதாலும் சர்ப்பசாந்தியை முறையாக, யோகம் பலம்பெற்ற நாளில் உங்கள் ஜாதகத்திற்குப் பொருத்தமான அனுகூல ஸ்தானங்களை தேர்ந்தெடுத்து செய்யும் பரிகாரங்கள் மூலமாகவே, பலன்களை நற்பலன்களாகவே அதிகம் பெறமுடியும். நண்பர்களின் ஒத்து



குரு 12-10-2012 முதல் 6-2-2013 வரை வக்ரகதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். இதன் வக்ரஇயக்க காலத்தில் வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறியே வந்துசேரும்.

விரயாதிபதி வக்ரம் பெறுவதால் தேவைப்படும்போது எல்லாம் பணம் வந்து கொண்டே இருக்கும். விலையுயர்ந்த பொருட்களை வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம் வெள்ளி மட்டுமல்லாமல் மின்சாதனப் பொருட்களான கணினிப் பொறி, கிரைண்டர், டி.வி. போன்ற தொகை கூடுதலாக கொடுத்து வாங்கும் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

9 ஆம் இடத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் தந்தை, பங்காளிகள் வகையில் கிடைக்கும் நன்மைகள் குறைவாகவே இருக்கும். அன்பு அதிகம் காட்டினால்தான் இன்பங்களை மட்டுமே எதிர்கொள்ள இயலும். அருகில் இருப்பவரை அனுசரிப்பதன் மூலமே ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். பொதுவாக இடமாற்றம் வரும் பொழுது யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. ஏனென்றால் வக்ர இயக்கம் முடிந்து பின்பு மீண்டும் பழைய இடத்திற்கே வரக்கூடிய வாய்ப்பு உருவாகலாம்.

இந்த குருப்பெயர்ச்சி உற்சாகத்தோடும் ஆரோக்கியத்தோடும் செயற்பட வைக்கப்போகிறது. உள்ளத்தில் நினைத்திருந்த எண்ணங்கள் அனைத்தையும் தெள்ளத்தெளிவாகத் தெரிந்துகொண்டு அவை நிறைவேற குடும்பப் பெரியவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். பணி நியமனம் செய்து பல நாட்கள் ஆகியும் ஊதிய உயர்வு கிடைக்க வில்லையே என்று நினைத்தவர்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி பணவரவைக் கூட்டப் போகிறது. வாழ்க்கை தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க தூரத்து உறவினர்களும் சிநேகிதிகளும் பக்கபலமாக இருப்பர். பிள்ளைகளின் கல்யாண கனவுகள் நனவாகும். வீடு கட்டும் வாய்ப்பு கூடிய விரைவில் நிறைவேறும். குலதெய்வ வழிபாடும் குறிப்பிட்ட நாளில் சர்ப்ப சாந்தியும் செய்வது நல்லது.

2 ஆம் இடத்து குருவால் இனிய பலன்கள் வந்துசேர முல்லைப் பூமாலை அணிவித்து வாரந்தோறும் தெட்சணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள். சிறப்பு வழிபாடாக வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று வலம்புரி விநாயகர், செல்வ முத்துக் குமரன், வைத்தியநாதர், வைத்திய

## 2- ஆம் இடத்துக்கு வரும் குரு திரண்ட செல்வத்தை, பணமழையில் நனையும் யோகத்தை வழங்கும்...!

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகம். குரு உங்கள் இராசியைப்பொறுத்தவரை 9, 12 க்கு அதிபதியாக விளங்குவதால் அதன் காரகத் தொடக்கத்திற்கு ஏற்றவிதத்தில் தான் பலன்களை வழங்குவார்.

கோச்சாரம் எப்படியிருந்தாலும் உங்களுக்குக் கணிக்கப்பட்டிருக்கும் சுயஜாதகமும் அதற்கு ஏற்றவிதத்தில்

அந்த அடிப்படையில் 2- ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் போது இனிய பலன்களே உங்களுக்கு நடைபெறும். சொன்ன சொல்லை நிறைவேற்றுவதற்கும் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கும் குருவின் அருள்தான் தேவை. அந்த அடிப்படையில் பார்க்கும்போது அதிக பலன் கிடைக்கும். இருந்தாலும் அது இருக்கும் இடத்திற்கும் அதில் பாதி

ழைப்பும் நாணயப் பாதிப்பில்லாத வாழ்க்கையையும் நடக்கும் தொழில் எதிர்பார்த்த இலாபத்தை அடையவும் தேர்ந்தெடுத்த இறைவழிபாடுகளே கைகொடுக்கும். சுக்கிரன் இராகு கேது திசை அல்லது புத்தி நடப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செற்படுவடுவது நல்லது.

### வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு?

இடப இராசிக்குள் சஞ்சரிக்கும்

**சிவல்புரி சிங்காரம்**

நாயகி அங்காரகன் ஆகிய தெய்வங்களை வழிபட்டு வாருங்கள். நந்தியையும் வழிபட்டு நல்ல திருப்பங்களை காணுங்கள்.

(தொடரும்)

# பொறியியல், விவசாய பீடங்கள் விரைவில் கிளிநொச்சியில்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் விரைவில் கிளிநொச்சி யில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

மேற்படி இரண்டு பீடங்களையும் கிளிநொச்சியில் விரைவில் ஆரம்பிப்பது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கை யில்,

எமது அழைப்பின் பேரில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு இரண்டு பீடங்களும் ஆரம்பிக்கவுள்ள அறிவியல் நகர் பிரதேசத்திற்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததோடு மட்டுமின்றி உயர்மட்ட கலந்துரையாடலையும் மேற்கொண்டு விரைவில் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ள அமைச்சருக்கு கிளிநொச்சி மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் உயர் கல்வி அமைச்சின் 400 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்யாதது மட்டுமின்றி இந்திய அரசின் 500 மில்லியன் ரூபா நிதியினையும் ஆரம்ப கட்டமாக ஒதுக்கீடு செய்து பணிகளை ஆரம்பிக்கவுள்ளதோடு மேலும் 200 மில்லியன் ரூபாவினை அடுத்த கட்டமாக இந்திய அரசிடம் பெற்று பணிகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய இந்நிகழ்வில் உயர் கல்வி அமைச்சர் திஸ்ஸ நாயக்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, இந்திய யாழ். துணை தூதரகத்தின் தூதுவர் மகாலிங்கம், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவர், யாழ். பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் வசந்தி அரசரட்ணம், விவசாய பீட பீடாதிபதி , விஞ்ஞான பீடபீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்கள், மாவட்ட கல்வித்துறை உயரதிகாரிகள், மாவட்ட கல்வி அபிவிருத்தி குழு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# நுளம்புபெருக்கத்தை கட்டுப்படுத்தும் கழிவு அகற்றல் தேசிய கொள்கை

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பான தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுற்றாடல் துறை அமைச்சும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சும் இணைந்து இத்தேசிய கொள்கையை தயாரிக்கும். இதற்கு சுகாதார அமைச்சு முழுமையாக ஒத்துழைப்பு நல்கும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைய நுளம்புப்பெருக்கம் தொடர்பாக சுகாதார அமைச்சின் நுளம்புக்குடம்பிகள் குறித்த நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் பல உண்மைகள் தெரியவந்திருப்பதாகவும் அவ்வதிகாரி கூறியுள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,

இந்த ஆய்வின்படி டெங்கு நுளம்புகள் மனிதனை குத்தும் கால எல்லை அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

அதாவது டெங்கு நுளம்பு காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணிவரையும் மாலையில் 4 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் குத்துவதாக ஏற்கனவே நம்பப்பட்டது. ஆனால் இந்நுளம்பு இரவு 10 மணி தொடக்கம் 11 மணி வரையும் குத்துவது புதிய ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றது.

இதேநேரம் டெங்கு நுளம்புகள் தேங்கி நிற்கும் சுத்தமான நீரில்தான் பல்கிப் பெரு குவதாக ஏற்கனவே கூறப்பட்டது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தில் 46 வீதம் கிணறுகளில் இடம் பெறுவதும் இவ்வாய்வின் மூலம் தெரிய வந் திருக்கின்றது.இதேவேளை டெங்கு நுளம்பு தனது வாழ்வில் நான்கு தடவைகள் தான் முட்டை யிடும். ஒவ்வொரு தடவையும் முட்டையிடுவதற்காக பல தடவைகள் மனிதனை குத்தி இரத்தம் குடிக்கும் பண்பை இந்நுளம்பு கொண்டிருப்பதும் தெரிய வந்துள்ளது. ஆனால் ஏனைய நுளம்புகள் முட்டையிடுவதற்காக ஒரு தடவையே மனிதனை குத்தி இரத்தம் குடிக்கும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# ஒலிம்பிக் உடைத்தயாரிப்பின் போது தொழிலாளர் உரிமை மீறப்பட்டுள்ளது

## பிரித்தானிய ஊடகம் குற்றச்சாட்டு

லண்டன் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளுக்கான உடைத்தயாரிப்பில் தொழிலாளர்களுக்கான மனித உரிமைகள் இலங்கையில் மீறப்பட்டுள்ள விடயம் பிரித்தானியாவின் சுதந்திர ஊடகத்தினால் அம்பலத்துக்கு வந்துள்ளது. லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்குரிய பிரத்தியேக உடைகள் இலங்கை, சீனா , பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறித்த இந்த நாடுகளில் உடைத் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் 8 நிறுவனங்களில் ஒலிம்பிக் சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போதே இவ்விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மேற்குறித்த நாடுகளில் உடைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 175 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்தே தொழிலாளர்களுக்கான மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள விடயம் அம்பலமாகியுள்ளது.

இவ்விடத்தில் இலங்கையிலேயே தொழிலாளர்களுக்கான மனித உரிமைகள் அதிகம் மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் தயாரிப்பில் அண்ணளவாக 25 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் சராசரி ஒருவர் மாதம் 60 மணித்தியாலங்கள் மேலதிகமாக பணியாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

நாளொன்றுக்கு ஒருவர் 18 மணி நேரம் வரையிலும் பணியாற்ற பணிக்கப்பட்டுள்ளதோடு இவர்களுக்கான கொடுப்பனவாக 12 ஆயிரம் ரூபாய்கள் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்கு ஒன்பது மில்லியன் யூரோ நிதி நன்கொடை

## ஐரோப்பிய ஒன்றியம், யுனிசெப் வழங்கின

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் கல்வி செயற் பாடுகளை விருத்தி செய்வதற்கு 9 மில்லியன் யூரோவை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியமும் யுனிசெப் அமைப்பும் முன்வந்துள்ளதாக ஆஸா றொசைனி தெரிவித்தார்.யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் எனும் மூன்று வருடத் திட்டத்தின் ஊடாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 18 பாடசாலைகள் கட்டப்படவிருப்பத்துடன் 10 சுகாதார மையங்களும் புனரமைக்கப்பட வுள்ளன.அது மாத்திரமின்றி இரண்டு சிறுவர் சிகி ச்சை மற்றும் மகப்பேறு காலத்திற்குப் பின்னரான சிகிச்சை நிலையங்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கான அலுவலகம், மருத்துவர் விடுதிகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் என்பன புனரமைத்துக் கொடுக்கப்பட வுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக ஆயிரம் வீடுகளுக்கு மலசல கூடங்களை நிர்மாணித்தல், 250 வீடுகளுக்கு கிணறுகளை அமைத்தல், 370 நீர் விநியோக இடங்களை அமைத்தல், 42 பாடசாலைகள் மற்றும் 16 கிராமிய சுகாதார நிலையங்களுக்கு தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் போன்ற அபிவிருத்திப் பணிகளும் இந்த திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-2)


## அறிவித்தல்

**24 மீற்றர் தொலைத்தொடர்பு**
**கோபுரம் அமைத்தல்.**
**62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

இல62/20, ஸ்ரான்லிவீதியில் (24) இருபத்து நான்கு மீற்றர் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத் தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள் இத்தொலைத் தொடர்புக்கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக்கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மாநகரசபை முதல்வர்
மாநகரசபை ,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

**100 மீற்றர் தொலைத்தொடர்பு**
**கோபுரம் அமைத்தல்**
**51, ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்**

இல51,ஆனந்தன்வடலி வீதி,கொழும்புத்துறையில் (100) நூறு மீற்றர் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இத் தொலைத்தொடர்புக் கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள் இத்தொலைத் தொடர்புக்கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக்கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மாநகரசபை முதல்வர்
மாநகரசபை ,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

**18 மீற்றர் தொலைத்தொடர்பு**
**கோபுரம் அமைத்தல்**
**101/25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

இல101/25,ஸ்ரான்லி வீதியில் (மக்கள் வங்கி ஒழுங்கை)(18) பதினெட்டு மீற்றர் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகரசபையில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. எனவே இத் தொலைத்தொடர்புக் கோபு ரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொதுமக்கள் இத்தொலைத் தொடர்புக்கோபுரம் இச் சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக்கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தினை இத்திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களினுள் யாழ். மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மாநகரசபை முதல்வர்
மாநகரசபை ,
யாழ்ப்பாணம்.

(சி-6563)

# இலங்கையைச் சூழும் கருமேகங்கள்

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து, ஏற்பட்டு வரும் மாற்றங்கள், அரசாங்கத்திற்கு சாதகமானவையாக அமையவில்லை.

சர்வதேச அரசியல் சூழமைவுகள் அரசாங்கத்தின் இறுக்கமான போக்கிற்கு நெகிழ்ந்து கொடுக்கும்போலத் தெரியவில்லை.

முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்து இந்த மாதத்துடன் மூன்று ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இந்தப் போரின் வெற்றியைக் கொண்டாடும் விழாக்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. வரும் 18 ஆம் திகதி மிகப்பெரியளவிலான பேரணி, அணிவகுப்பு, என்பன இடம் பெறவுள்ளன.

அதேநாள் வோஷிங்டனில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசிற்கு மிகவும் சோதனையான நேரமாக இருக்கப் போகிறது.

ஏனென்றால், போருக்குப் பிந்திய நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, வடக்கு மாகாண சபைக்கான தேர்தல், உள்ளிட்ட முக்கிய விவகாரங்களில் அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன என்பது பற்றி அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரியிடம் விபரிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது.

மார்ச் மாதம் வோஷிங்டனுக்கு வந்து இவைபற்றி விளக்கமளிக்கு மாறு கடந்த பெப்ரவரி மாதம் வெளிவிவகார அமைச்சர் பீரிசுக்கு கடிதம் எழுதியிருந்தார் அமெரிக்க இராஜாங்க செயலர் ஹிலாரி.

அந்த அழைப்புக்கு முதலில் அரசாங்கம் பதில் அனுப்பவில்லை ஜெனீவாத் தீர்மானம் நிறைவேறுகின்ற கட்டத்தில்தான் இந்த அழைப்பு ஏற்கப்பட்டது. அதன் பின்னர்தான் மே 18 ஆம் திகதி சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பின் முக்கியமான நோக்கம் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை

**கே: சஞ்சயன்**

அரசாங்கம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப் போகிறது என்பதைப் பற்றி விளக்கம் அளிப்பதுதான். இது குறித்து அரசாங்கம் ஏற்கனவே கூட்டணிக் கட்சிகளிடம் ஆலோசனை செய்திருந்தது. அதற்கமைய வெளிவிவகார அமைச்சு ஒரு அறிக்கையை தயார் செய்வதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

ஆனால், இந்த அறிக்கையை அமெரிக்காவிடம் கையளிக்க முன்னதாக கொழும்பில் வெளியிடவேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதாகவும் கூறப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று அரசின் வாயாலேயே சொல்லவைக்க - அதாவது அரசின் பொறுப்பை வெளிப்படுத்த வைக்க முனைகிறது அமெரிக்கா.

**மேற்குலக அழுத்தம், சதிகள் என்றெல்லாம் அரசாங்கம் பிரசாரம் செய்துவரும் நிலையில் இந்த விடயத்தில் அமெரிக்கா இறுக்கமான போக்கை காட்டுவதாக தெரிகிறது. இன்னொரு பக்கத்தில் மீறல்களுக்கு பொறுப்புக்கூறத் தவறியுள்ளதையும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும் கூறும் நீண்ட அறிக்கை ஒன்றை பிரித்தானியா வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ளார்.**

அதுமட்டுமன்றி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள இலங்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்திலும் பிரித்தானியா முக்கிய பங்காற்றவுள்ளதாகவும் கூறியுள்ளது.

இத்தகைய குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் உரிமை பிரித்தானியாவுக்கு இல்லை என்று இலங்கை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா பதில் கொடுத்துள்ளார்.

இவ்வாறான எந்தப் பதிலை அரசாங்கம்' கொடுத்தாலும்கூட மேற்கு நாடுகள் சும்மா இருந்துவிடப்போவதில்லை. ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னர் இலங்கை தன்பாட்டில் இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட மேற்குலகம் தயாராக இல்லை என்பதையே அண்மைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முனைகிறதா- அடுத்து என்ன செய்யப்போகிறது என்று மேற்குலகம் தொடர்ந்து கண்காணித் வருகிறது.

அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கொடுக்கும் அழுத்தங்களை குறைத்துக்கொள்ளவும் மேற்குலகம் தயாராக இல்லை.

இந்த நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் நவம்பர் முதலாம் நாள், நடைபெறப்போகும் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த மீளாய்வுக் கூட்டம் இருக்கிறது. இக் கூட்டத்தில் அரசுக்கு சிக்கல்கள் இருக்கும்போலத் தெரியவில்லை.

ஏனெனில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளித்த முக்கியமான ஐந்து நாடுகளினதும் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இப்போது இந்தியாவில் இலங்கைக்கு சாதகமான நிலை உள்ளதென்று கூறமுடியாதுள்ளது.

இந்திய நாடாளுமன்றக் குழுவின் இலங்கைப் பயணம் இரு நாடுகளுக்குமே புதிய நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இது வரை எல்லா விவகாரங்களிலும் இலங்கை அரசுக்கு சர்பாக நின்ற இந்தியா இனிமேல் அவ்வாறு இருக்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது.

அதுவும் புதுடில்லியை மையமாகக் கொண்ட பிரதான கட்சிகளை இந்தப்பயணம் ஒரே நிலைப்பாட்டிற்குக் கொண்வந்து விட்டுள்ளது.

**இந்தியக்குழுவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் அரசியல் அமைப்பின் 13 திருத்தத்தையும் நடைமுறைப் படுத்தச் சொல்கிறது. வடக்கில் இராணுவத் தலையீடுகளை அகற்றச்சொல்கிறது. இப்படியாக அரசாங்கம் விரும்பாத பல அழுத்தங்கள் இந்தியாவின் தரப் பிலிருந்து வருகிறது.**

இதுவரை இந்திய அரசை சமாளித்தால் போதுமென்ற நிலை தான் இருந்துவந்தது. அந்த சூழலும் இப்போது மாறிவிட்டது. அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் பயணத்தை அடுத்து இப்போது எல்லாத் தரப்புகளையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலை அரசுக்கு உருவாகியுள்ளது. இது கல்லில் நார் உரிக்கின்ற செயல்.

**இந்த சூழலில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூனும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இலங்கை விவகாரம் பற்றி பேசிவிட்டுத்தான் போயிருக்கிறார். அவரும் நல்லிணகக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்து**

*மாறும், மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கான பொறி முறையை உருவாக்குமாறும் அழுத்தம் கொடுத்துள்ளார்.* அவர் இப்படிப் பலமுறை கூறிவிட்டார். ஆனால், அரசாங்கம் இதையெல்லாம் கருத்திலோ கணக்கிலோ எடுத்துக் கொண்டதில்லை.

இம்முறை அவர், இறுதிப் போரில் பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறியுள்ளதை அரசாங்கத்தினால், ஏற்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி இந்த விவகாரம் குறித்து மன்மோகன் சிங்குடன் அவர் பேசியுள்ளதும் இருவருமே நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டிற்கு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.


**இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் இந்தப் பரிந்துரைகள் தொடர்பான பொது நிலைப்பாடு தொடர்ந்து வலுப் பெற்று வருகிறது.**

ஐ.நா. நிபுணர் குழுவை பான் கி மூன் நியமித்தபோது அந்தக் குழியில் விழுந்துவிடாமல் தப்பிக்கவே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது.

ஆனால், இப்போது அதுவே அரசாங்கத்துக்கு ஒரு குழிபோல அமைந்துவிட்டது. இதிலிருந்து இனி வெளியே வரமுடியாது. இல்லையேல் சர்வதேச தடைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை எப்போதோ உருவாகலாம். இப்போதைய சர்வதேச அரசியல் சூழல் அரசாங்கத்திற்கு சார்பானதொரு நிலையில் இல்லை.

**நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாமல் தப்பிக்கும் ஒரு வழியை அரசாங்கம் இனித் தேடவும் முடியாது- தேடிக் கண்டுபிடிக்கவும் முடியாது.**

**மீறல்களுக்கு பொறுப்புக்கூறத் தவறியுள்ளதையும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும் கூறும் நீண்ட அறிக்கை ஒன்றை பிரித்தானியா வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ளார்.**



# கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டும்

## அல்லது பட்டதாரிகளின் நியமனம் இரத்து

(கொழும்பு)

**தெரிவு செய்யப்படும் பட்டதாரி ஆசிரியர்கள் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பாடசாலைகளில் கடமையாற்ற தயாராகவிருக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்கான நியமனம் இரத்துச் செய்யப் படுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக இம் மாத இறுதிக்குள் ஆயிரம் தகவல் தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங் கள் வழங்கப்படவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய அநேக பட்டதாரிகளுள் ஆயிரம் பேர் மிகவும் சிறப் பான தொழில்நுட்ப நிபுணத்துவம் அடங்கிய குழுவினரால் தெரிவு செய்யப்பட்டிருக்கின் றனர்.

தெரிவு செய்யப்பட்டிருக்கும் தொழில்நுட்ப பட்டதாரிகள் கடமையாற்ற வேண்டிய பாடசா லையினை கல்வியமைச்சே முழுமையாக தீர்மானிக்கிறதே தவிர இதில் பட்டதாரிகளின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடம் வழங்கப் படவில்லை.

ஆயிரம் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு ஒரே தடவையில் ஆசிரிய நியமனம் வழங்கு வது இதுவே முதற்தடவையாகும்.

ஆசிரிய நியமனம் பெறுவோர் அவர்களது மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் சேவையாற்றுவதற்கு முன்னுரிமையளிக்கப் படும் விதத்திலேயே ஒழுங்கு விதிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் இல்லாத நிலையில் அதற்கு அண்மித்த இன்னுமொரு பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்டிருக்கும் பட்டதாரி ஒருவர் அப்பாடசாலைக்குரிய ஆசிரியராக நியமிக்கப்படுவார்.

இதுபோன்று வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள ஆயிரம் பாடசாலைகளு க்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் தொழில்நுட்ப பட்டதாரிகள் நியமிக்கப்படுவர்.

இப்பாடசாலைகளுக்கென மேலதிகமாக ஆயிரம் கணித ஆசிரியர்கள், ஆயிரம் விஞ் ஞான ஆசிரியர்கள் மற்றும் ஆயிரம் ஆங் கில ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ள னர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அமை ச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## வாகன விபத்தில் ஒருவர் பலி

### 10 பேர் காயம்

ஹபரனை 32 ஆம் மைல்கல் பகுதி யில் நேற்றைய தினம் அதிகாலை 4 மணி யளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. விப த்துச் சம்பவமொன்றில் வானின் சாரதி பலி யானதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

மருதமுனையைச் சேர்ந்த எம்.எச்.ஏ. றொஷான் (வயது 35) என்பவரே பலி யானவராவார். கொழும்பிலிருந்து மருத முனை நோக்கி வந்து கொண்டிருந்த வான் வாய்க்காலில் வீழ்ந்து பின்னர் மரத் துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. சாரதி தூக்கமயக்கத்தில் வானை செலுத்தி யிருக்கலாமென சந்தேகிப்பதாக ஹபரணைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## இந்திய மருந்துகளுக்கு இலங்கையில் தடையில்லை- இந்திய உயர்ஸ்தானிகரகம்

(கொழும்பு)

இலங்கையில் இந்திய மருந்துப் பொரு ட்கள் எவையும் தடை செய்யப்படவில்லை என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித் துள்ளது.

இந்திய மருந்துப் பொருட்கள் சில இலங் கையில் தடை செய்யப்பட்டதாக இலங்கை யின் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி யிருந்தன.

எனினும் இதனை மறுத்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் அவ்வாறான முறைப் பாடுகள் எவையும் இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தமக்கு கிடைக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இந்திய லோக்சபையில் இந்த தகவல் எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (அ-2)

## தேசிய நல்லிணக்கம் குறித்து தமிழக முதல்வருக்கு விளக்கம்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கம் தொடர்பில் இந்திய முதலமைச்சர்களுக்கு இலங்கை அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்தியா வின் அனைத்து மாநிலங்களினதும் முதல மைச்சர்களுக்கு தேசிய நல்லிணக்கம் தொடர் பில் விளக்கமளித்துள்ளார். எழுத்து மூலம் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் போரின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் என்பன தொடர்பில் முதலமைச்சர்கள் திருப்தி அடைவார்கள் என அமைச்சர் பீரிஸ் தெரிவித் துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் நல்லிணக்கம் தொடர்பில் விளக்கமளித்து அமைச்சர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (அ-2)

## அரசில் இருக்கும் புலி உறுப்பினர்களுக்கே முதலில் புனர்வாழ்வளிக்க வேண்டும்

### செல்வராசா எம்.பி.சுட்டிக்காட்டு

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியவர்கள் கைது செய்யப்பட்டு புனர் வாழ்வு அளிக்கப்பட வேண்டுமெனில் அரசா ங்கத்திலே பதவி வகிக்கும் அதே இயக்கத் தைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் புனர்வாழ் வளிக்கப்பட வேண்டும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வ ராசா தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத் திய விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதி யாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், 2007 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத் தில் யுத்தம் நீங்கிய பின்னர் 300 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கடத்தப்பட் டுள்ளனர். அதற்கான பட்டியலை தயாரித்து அரசாங்கத்திடம் பொலிஸாரிடம் கையளித் தாலும் கூட இதுவரை அவர்கள் எங்கிருக்கின் றார்கள் என்று அரசாங்கம் எமக்குக்கூறியது கிடையாது.

இவ்வாறிருக்கையில் விடுதலைப்புலிக ளின் இயக்கத்திலிருந்து விலகியவர்கள் என்று திருகோணமலை மாவட்டத்தில் மீண் டும் கைது செய்யப்படுகின்றனர். திருகோண மலை மாவட்டத்தில் 220 இளைஞர்களும் யுவதிகளும் மீண்டும் கைது செய்யப்பட்டிருக் கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளைய தினத் திற்குப்பின் இப்படிப்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக் கின்றன.

எமக்கு இந்த நாட்டில் உண்மையான சமாதானம் கிடைக்கவில்லை என்று நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். தமிழர்களின் அபிலாஷைகள் என்று தீர்க்கப்படுகின்றதோ அன்றுதான் உண்மையான சமாதானத்தை தமிழன் இந்நாட்டில் அனுபவிக்க முடியும்.

அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருக் கின்ற சில தமிழ் அரசியல் கட்சிகள் அபிவிரு த்தி என்ற போர்வையில் மயங்கிக் கிடக்கின்றா ர்களே தவிர தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதை புரியாத புருஷர்களாக இரு ந்து கொண்டிருக்கின்றார்கள். (அ-2)

## மாங்குளத்தில் காற்றுடன் மழை


### கூரைகள் தூக்கி வீசப்பட்டன

(மல்லாவி)

மாங்குளத்தில் நேற்று முன்தினம் திடீரென வீசிய புயல் காற்றுடனான மழை காரணமாக பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் தற்காலிக வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தன. இதன் காரணமாக மாங்குளத்தில் பல குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

தற்பொழுது இக்காற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் தூக்கி வீசப்பட்ட தங்களுடைய கூரைத்தகடுகளை செப்பனிடுகின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-15)



கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து மாணவர்களை பாதுகாக்கும் நோக்குடன் சிறுவர்களுக்கான பாதுகாப்பாக இருப்போம் எனும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கருத்தரங்கு வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கனேடிய செஞ்சிலுவைச்சங்கத்தின் சிரேஷ்ட தமிழ் மொழி மூல பயிற்றுநர் ஜெகன் பிரகாஸ், வடமாகாண உளசமூக வள நிலைய உதவி முகாமையாளர் ச.ஆனந்த நடராஜன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)






வித்தியாசாகர் தனது குருகுலத்தில் ஒவ்வோர் ஆண்டும் விஜயதசமியன்று புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வார். அன்று பழைய மாணவர்களும் குருகுலத்திற்கு விஜயம் செய்து, குருவை வணங்கி விட்டு, தன் பழைய நண்பர்களைச் சந்தித்து உரையாடிச் செல்வர்.

ஒரு சமயம், தன் பழைய மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது,

# அம்புலி மாமா கதைகள்

சிலர் உற்சாகமாகவும், சிலர் வருத்தமாகவும் இருப்பதைக் கண்ட வித்தியாசாகர், வருத்தமாயிருந்தவர்களை விசாரித்த போது தங்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் யோகம் இல்லை என்று கூறினர். அதற்கு வித்தியாசாகர், வாழ்க்கை என்பது பல சமயங்களில் வெற்றி வாய்ப்புக்களைத் தருகிறது.

அதைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் வெற்றிப்படிகளில் கால் வைத்து நடந்து செல்கின்றனர். வாய்ப்புக்களை நழுவ விடுபவர்கள் தங்களுக்கு யோகம் இல்லை என்று கூறிக் கொள்கின்றனர். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நமது அறிவைப் பயன்படுத்தினால் நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒருவனுடைய மகிழ்ச்சி அவனுடைய அறிவையையும், மனத்தையும் பொறுத்தது. இதை விளக்க ஒரு கதை கூறுகிறேன்! என்று சொல்லி விட்டு கதையைத் தொடங்கினார்.



கிருஷ்ணபுரி என்பது ஒரு கடலோரக் கிராமம்! அங்கிருந்து சற்றுத் தொலைவில் நடுக்கடலில் அன்னத்தீவு என்று ஒரு தீவு இருந்தது. அந்தத்தீவில் ஒரு புகழ்பெற்ற பரமேஸ்வரி அம்பிகையின் கோயில் இருந்தது. ஒருமுறை கிருஷ்ணபுரியிலிருந்து சிலர் அம்பிகையை தரிசிக்க ஒரு படகில் புறப்பட்டனர்.

திடீரென வீசிய சூறைக் காற்றினால் படகு கவிழ்ந்தது. படகில் இருந்த பலரும் கடலில் மூழ்கி இறக்க சிலர் மட்டும் எப்படியோ உடைந்த படகின் பாகங்களைப் பிடித்துக் கொண்டு கரையேறினர். அவ்வாறு கரையேறியது மூவர் மட்டுமே! அதுவும் அவர்கள் கரையேறியது அன்னத் தீவல்ல! வேறு ஒரு தீவு!

மறுநாள் பொழுது புலர்ந்ததும் கரையில் ஒதுங்கிய அவர்கள் அந்தத் தீவைக் கண்டு மிரண்டு போயினர். ஏனெனில் அங்கே மனித நடமாட்டமேயில்லை. அங்கு தென்னை மரங்களும், பேரீச்சை மரங்களுமே இருந்தன. உயிர்பிழைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தாலும், அந்தத் தீவில் எப்படி காலங்கழிப்பது என்ற பிரச்சினை மூவரையும் வாட்டியது.

மூவரில் ஒருவர் கோயில் பூசாரி! ஒருவர் வியாபாரி! மூன்றாமவன் ஒரு பிச்சைக்காரன். தேங்காயையும் பேரீச்சம்பழத்தையும் எத்தனை நாள் உண்ண முடியும்? என்று பூசாரி புலம்பினான். ஆகா! இங்கு எத்தனை தேங்காய்கள், பேரீச்சம்பழம் இருக்கின்றன? இவற்றை விற்றால் நன்றாக சம்பாதிக்கலாமே! என்று வியாபாரி கூறினான். ஆனால் அநாதையான பிச்சைக்காரன் அவர்களைப் போல் கவலைப்படவில்லை.

நாட்கள் சென்றன. பிச்சைக்காரன் நன்றாக உண்டு, உறங்கி சொகுசாக இருக்க ஏனைய இருவரும் அரற்றிக் கொண்டேயிருந்தனர். ஒருநாள் பூசாரி கடற்கரை மணலில் அம்பிகையின் சிலை ஒன்று புதைந்திருக்கக் கண்டான். உடனே அதை வெளியே கொண்டு வந்து தென்னந் தோப்பிற்கு அருகில் அதைப் பிரதிஷ்டை செய்தான். பின்னர் அங்கிருந்த காட்டுப் பூக்களைப் பறித்து அம்பிகையின் மேல் தூவி அர்ச்சனை செய்தான். எப்போதும் கவலையுடனிருந்த வியாபாரியும் அம்பிகையைப் பூசை செய்வதில் ஈடுபட்டான்.

# யோகம்

தனக்கு வயிராற உணவு தினமும் கிடைத்ததற்காக நன்றி கூறிப் பிச்சைக்காரனும் அம்பிகையை வழிபட்டான். அந்த மூவர் மீதும் அம்பிகைக்கு இரக்கம் உண்டாகியது. அன்று பூசாரியின் கனவில் தோன்றி, கடற்கரை மணலில் புதைந்து கிடந்த என்னைப் பிரதிஷ்டை செய்து தினமும் பூஜை செய்யும் உன்னைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.


எனக்காக இங்கே ஒரு கோயில் எழுப்பி, பல பக்தர்கள் இங்கே என்னை நாடி வரும்படி செய்வாயா? என்று கேட்டாள். கட்டளையிடு தாயே! அதன்படி செய்கிறேன். என்னை என் குடும்பத்துடன் சேர்த்து விடு! அது போதும்! பின்னர் நான் நீ கூறியபடி செய்கிறேன்! என்றான் பூசாரி. சரி! நாளைக்கே இந்தத் தீவிற்கு இரு மீனவர்கள் வருவர்! அவர்கள் மூலம் நீ இங்கிருக்கும் தகவலை உன் குடும்பத்தினருக்குத் தெரியப் படுத்து! என்று கூறிக் கனவிலிருந்து மறைந்தாள்.

மறுநாள் தான் கண்ட கனவை பூசாரி மற்ற இருவரிடமும் கூற, முதலில் அவர்கள் நம்பவில்லை. ஆனால், நிஜமாகவே ஒரு கட்டுமரத்தில் பயணம் செய்தவாறு இரண்டு மீனவர்கள் அந்தத் தீவிற்கு வந்ததும், அது அம்பிகையின் அருள்தான் என்று மூவரும் உணர்ந்தனர். அவர்களிடம் பூசாரி தான் இருக்கும் தீவைப்பற்றிக் குறிப்பிட்டுத் தன் குடும்பத்தை உடனே தன்னுடைய தீவிற்கு வரச் சொன்னார்.

அவ்வாறே வியாபாரியும் கூற, பிச்சைக்காரன் தனது ஏனைய பிச்சைக்கார நண்பர்களை அங்கு வருமாறு கூறினான். விரைவிலேயே, இருவரின் குடும்பத்தினரிரும், மற்றும் ஆர்வமுற்ற பலரும் அந்தத் தீவிற்கு வந்தனர். பிச்சைக்காரர்களும் அங்கே படையெடுத்தனர். எல்லோருமாகச் சேர்ந்து அம்பிகைக்கு ஒரு கோயில் எழுப்பினர்.

அதனால் மகிழ்ச்சியுற்ற அம்பிகை அவர்கள் முன் தோன்றி, உங்களுடைய செய்கையால் மிக்க மகிழ்ச்சியுற்றேன்! இப்போது நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வரம் கேளுங்கள்! என்றாள் அம்பிகை. நான் இங்கேயே வசிக்க விரும்புகிறேன். உனக்கு தினமும் முறைப்படி பூசை, புனஸ்காரம் செய்ய விரும்புகிறேன்! என்றான் பூசாரி.

தாயே! இங்குள்ள தேங்காய், பேரீச்சம் பழங்களை விற்று வியாபாரம் செய்ய விரும்புகிறேன். அந்த வியாபாரம் நன்கு செழித்து நான் ஏராளமான செல்வத்திற்கு அதிபதியாக வேண்டும்! என்றான் வியாபாரி. அம்மா! எனக்கு ஒரு வெள்ளியினாலான ஓடு அளிப்பாய்! அதைக் கொண்டு பிச்சை எடுக்க விரும்புகிறேன்! என்றான் பிச்சைக்காரன். அவர்கள் கேட்ட வரங்களை அளித்து விட்டு அம்பிகை மறைந்



தாள்.

சக்தி வாய்ந்த அம்பிகையின் கோயில் அந்தத் தீவில் இருப்பதைக் கேள்விப்பட்டு ஆயிரக்கண்க்கான பக்தர்கள் தினமும் அங்கே வர ஆரம்பித்தனர். அவர்கள் கோயில் பூசாரிக்குத் தந்த காணிக்கைகளினால், பூசாரிக்கு நிறைய வருமானம் கிடைத்தது. கோயிலுக்கு வரும் பக்



தர்களுக்குத் தேங்காய், பேரீச்சம்பழம் விற்பனை செய்தே வியாபாரி பெரிய செல்வனாகி விட்டான்.

ஆனால்வெள்ளித்திருவோடுடன்கோயிலில் அமர்ந்த பிச்சைக்காரனை வெள்ளித் திருவோடு வைத்திருக்கும் பணக்காரன் பிச்சைக்காரன் போல் வேடம் போடுகிறான் என்று நினைத்து, பக்தர்கள் ஏனைய பிச்சைக்காரர்களுக்கே தர்மம் செய்தனர்.

கதையைக்கூறி முடித்த வித்யாசாகர் பார்த்தீர்களா? அம்பிகை மூவருக்கும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பினை அளித்தும் இருவர் மட்டுமே அதை சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிசசைக்காரன் அதைப்பயன்படுத்தத் தவறிவிட்டான். அதனால் யோகம் என்பது நம் அறிவின் திறத்தைக்கொண்டு கிடைத்தவாய்ப்பினை ஒழுங்காகப் பயன்படுத்துவதுதான்! என்றார்.

# அதிமேதாவியாகும் யோகம்

லக்னத்திலிருந்து 5 ஆம் இடம் சுப கிரகத்தின் சாரமாக அமைந்து யோக கிரகத்தாலோ, சுப கிரகத்தாலோ பார்க்கப்பட்டோ அல்லது சேர்ந்தோ அமைந்தால் அவர் எந்த பிரச்சினைகளையும் சமாளிக்கக் கூடியவராகவும் மற்றவர்களுக்கு புத்தி சொல்லக் கூடியவராகவும் அதிமேதாவியாகவும் திகழ்வார்.

பூர்வ புண்ணிய ஸ்தானமான 5 ஆம் பாவாதிபதி உச்சம் பெற்று சுபருடன் இருக்க குரு பகவான் கேந்திரங்களிலோ அல்லது 5, 9 ஆகிய இடங்களிலோ இருக்க அந்த ஜாதகர் பிறவியிலேயே மேதாவியாகத் திகழ்வார்.

கேந்திரங்களில் புண்ணிய ஸ்தானாதிபதி சுபக் கிரகத்துடன் சேர்ந்து இருந்தால் எந்த விடயத்திலும் நல்ல ஞாபகசக்தி உடையவராகத் திகழ்வார்.

பூர்வ புண்ணய ஸ்தானாதிபதி சுபர் வீட்டில் இருந்து 5 ஆம் இடத்தில் குருவும் இருக்க சாமர்த்தியமாகச் செயற்படுவார். மோதாவியாகவும் திகழ்வார்.

கீர்த்தி ஸ்தானாதிபதியாக 3 இற்குடையவன் புதனுடன் சேர்ந்து பலத்திருக்க நல்ல குணவானாகத் திகழ்வான்.

ஒருவர் ஜெனித்த நவாம்ச லக்னத்திலிருந்து பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய 5 ஆம் இடம் பாக்கிய ஸ்தானமாகிய 9 ஆம் இடம், இரண்டு பாபக்கிரகங்கள் இருந்தால் மந்திரங்களை சித்தி செய்து நல்ல மாந்திரீகனாகத் திகழ்வான். பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் பிசாசு, பூத கணங்களை மிரட்டக்கூடிய மந்திரங்களை சித்தி செய்வான்.

பூர்வ புண்ணிய ஸ்தானதிபதி பலம் பெற்று 1,4,7,10 இல் அல்லது 5 அல்லது 6 ஆவது இடத்திலோ இருக்க லக்னாதிபதி 2 இலோ இலாபஸ்தானமாகிய 11 ஆம் இடத்திலோ இருந்தால் சிறந்த மேதையாகவும் சாஸ்திரங்களை அறிந்த தர்மவானாகவும் தீகழ்வான்.

ஐந்தாம் பாவாதிபதி ஜீவஸ்தானமாகிய பத்திலோ பதினொன்றிலோ இருந்து பத்துக்குடையவன் லக்ன கேந்திரத்தில் இருந்தால் எந்த மொழி கற்கிறானோ அதில் கவியாக விளங்குவான்.

சந்திரன் நின்ற இராசிக்கு 5 ஆம் இடத்திலோ அல்லது 9 ஆம் இடத்திலோ கூடி இருக்க புதன் இருக்கும் வீட்டிற்கு 5,9 இல் செவ்வாய் இருந்தால் எல்லாக் கலைகளையும் கற்று அறிவார்.

குருவோ, சுக்ரனோ தனாதிபதியாகி சூரியனாலோ செவ்வாயாலோ பார்வையிட்டால் மற்றவரை திகைக்க வைக்கும் வகையில் தர்க்க சாஸ்திரம் அறிவார்.




ஜாதகத்தில் சுக்ரபகவான் இராசியிலும் நவாம்சத்திலும் ஒரே வீட்டில் இருக்க நல்லஞானமும் வேதாந்தமும் அறிந்தவனாகத் திகழ்வான்.

புதன்பகவான் கேந்திரத்திலோ அல்லது 5, 9 இலோ சுபர் பார்வை பெற்றால் வருங்காலம் அறியும் ஞானம் உள்ளவராக திகழ்வார்.

குரு பகவான் இராகு அல்லது கேதுவுடன் கூடி



சனியும் சம்பந்தப்பட்டு சுக்ரனால் பார்க்கப்பட்டால் மகாவித்வானாக திகழ்வார்.

சூரியன் , சந்திரன் இவர்கள் வீட்டில் இராகு இருந்து சூரியன், சந்திரன் சேர்ந்து இருந்தால் அவர்கள் இல்லத்தில் வசிக்கும் பசுவால் அவர்கள் அதிக தொல்லைகளை அடைவார்கள்.

லக்னத்தில் குரு பகவானுடன் கீர்த்தி ஸ்தானாதிபதியான 3 இற்குடையவன் சேர்ந்து இருக்க மிருகங்களால் பீதி உண்டாகும்.

சத்ரு ஸ்தானமாகிய 6 ஆம் பாவாதிபதியும் செவ்வாயுடன் கூடினால் நெருப்பால் நஷ்டம் உண்டாகும்.

தனஸ்தானத்தில் சனி பகவான் இருந்து பாப கிரகத்தின் சேர்க்கை பார்வை உண்டாக நாய் மூலம் பீதி உண்டாகும். அல்லது சனி பகவானுக்கு இரண்டாம் பாவாதிபதி சம்பந்தம் கிடைத்தோ அல்லது பார்க்கப் பெற்றாலும் நாயால் பீதி உண்டாகும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## மருது

**Botanical Name- Terminalia arjuna**
**Family- Combretaceae**
**Engl- White murdah**
**Sinh- Kumbuk**

நிறைய கிளைகளையுடைய பசுமையான பெரிய மரமாகும். பட்டை தடிப்பானதும் றோஸ் நிறமான அல்லது சாம்பல் கலந்த பச்சை நிறமாக காணப்படும்.

பட்டை வழுவழுப்பாக இருக்கும் இலையுதிர்மரமாகும். இலைகள் தனியிலை, எதிரிலையடுக்கம். 7.5-15 சென்ரி மீற்றர் நீளமுடையது. கோளவடிவானது. மெல்லிய பச்சைநிறமானது. ஒழுங்கான பூக்கள் பச்சை கலந்த வெண்ணிறமுடையது. கோளவடிவ பழங்கள். 3.5 - 5 சென்ரிமீற்றர் நீளமானது. கடும் மண்ணிறமானது. விதைகளைக் கொண்ட தடித்த கனியின் முனைகளில் சிறகுகள் காணப்படும். சித்திரை, வைகாசி மாதத்தில் பூக்களை காணலாம்.

**பரம்பலும் இன விருத்தியும்.**

யாழ். மாவட்டத்தில் சாலை ஓரத்திலும் திருக்கோவில்களிலும் காணலாம். விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். இதில் கருமருது, கலிமருது, பூமருது என வேறு இனங்களுமுண்டு. இலை எல்லாம் மருத்துவகுணமிக்கவை.

**மருத்துவ குணங்கள்**

✱ இதனுடைய இலை, பழம், பட்டை , விதை ஆகியவை மருத்துவ குணம் மிக்கவை.

✱ மருத மரத்தின் 5 கிராம் இலைகளை சேகரித்து சுத்தமாக கழுவி அரைத்து 100 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து காலை, மாலை 3-5 நாட்கள் அருந்த பித்த வெடிப்பு நீங்கும்.

✱ மருதமிலைகளை நன்கு அரைத்து புரையோடிய புண்களில் கட்டி வர புண்கள் ஆறும்.

✱ மருதம் பூவை அரைத்து பூச வீக்கம் வடியும்.



✱ மருதம் பட்டையை சிறு சிறு துண்டுகளாக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். இதில் தினமும் 5 கிராம் அளவு வெந்நீரில் இரவில் சாப்பிட்டு வர சிறுநீர் அதிகமாக வெளியேறுவது கட்டுப்படும். நீரிழிவிற்கும் சிறந்த மருந்தாகும்.

✱ மருதம் பட்டை, கடல் அழிச்சிக் பட்டை, இரண்டையும் ஒரேயளவாக எடுத்து சிறுதுண்டுகளாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 1-2 கிராம் அளவு வெந்நீரில் காலை,மாலை உட்கொள்ள நீரிழிவு நோய் கட்டுப்படும்.

✱ மருதம்பட்டை, நெல்லிக்கனி இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டால் பித்தம், மயக்கம் தெளியும்.

✱ மருதம்பட்டை, சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து 1- 2 கிராம் அளவு சாப்பிட்டால் தாகம் தீரும்.

✱ மருதம்பட்டை 100 கிராம், நிலவேம்பு 25 கிராம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து 125 கிராமிற்கு 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி காலையில் குடித்து வர அடிக்கடி காய்ச்சல் வராமல் தடுக்கலாம்.

✱ மருதம்பட்டை, வேப்பம்பட்டை, இரண்டையும் சம அளவு எடுத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் கிருமித்தொற்று ஏற்படாது. 15 நாட்கள் வரை தொடர்ந்து தினமும் ஒரு வேளை சாப்பிடலாம்.

✱ இருதயபலவீனம், இருதய வீக்கம் போன்றவற்றிற்கு மருதம்பட்டை சிறந்த மருந்தாகும்.

✱ மருதம்பட்டை, கடுக்காய், தான்றிக்காய் மூன்றையும் சமஅளவு எடுத்து அரைத்து 1-2 கிராம் அளவு தினமும் இரு வேளை சாப்பிட்டு வந்தால் சருமத்தில் ஏற்படும் தடிப்பு ஆறும்.

✱ இருதய பலவீனம், இருதய வீக்கத்திற்கு மருதம்பட்டை, வெண்தாமரை பூவிதழ் ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 50 மில்லி அளவு காலை, மாலை அருந்தலாம். அல்லது மருதம்பட்டையை தனித்து எடுத்து குடிநீர் காய்ச்சியும் பயன்படுத்தலாம்.

✱ மருதம்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, கருவேலம்பட்டை, கொட்டைப்பாக்கு ஒவ்வொன்றும் 25 கிராம் அளவு எடுத்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக்கொள்ளவும்.இப் பொடியால் பல்துலக்கி வர பல்வலி, வாய்நாற்றம், ஈறுகளில் இரத்தம் வடிதல் போன்ற குறைபாடுகள் தீரும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

**நீரிழிவு நோயாளிகள்,**

மருதம்பட்டை, அறுகம்புல், நாவல் கொட்டை, நெல்லி வற்றல், கடுக்காய்த் தோல் ஆகியவற்றை சம அளவாக எடுத்து கழுவி, நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை உட்கொள்ள நீரிழிவு தீரும்.

மருதம் பட்டைத்தூள் ஒரு பங்கிற்கு 4 பங்கு கரிசலாங்கண்ணித் தூள் கலந்து அதில் ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை தேனில் சாப்பிட்டுவர காமாலை, கல்லீரல் வீக்கம் தணியும்.

மருதம் பழத்தை அவித்து பிசைந்து புண்களில் கட்டிவர ஆறும்.

# திருமலை. விநாயகர் ஆலய விவகாரம்; சென்னையில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

## மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு; 20 பேர் கைது

(சென்னை)

திருகோணமலையில் விநாயகர் கோவிலை அகற்ற அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் அருகே நேற்று முன்தினம் மாலை முற்றுகை போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இப்போராட்டத்தின் போது எரிக்கப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவ பொம்மையுடன் முச்சக்கரவண்டியும் தீப்பிடித்து எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருகோணமலையில் விநாயகர் கோவிலை இடிக்க அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதைக் கண்டித்து இந்து முன்னணி சார்பில் இப்போராட்டம் நடந்தது. இலங்கை அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியவாறு டிடிகே சாலையில் இருந்து இலங்கைத் தூதரகத்தை நோக்கி இந்து முன்னணியினர் சென்றனர்.

அப்போது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை அவர்கள் எரிக்க முயன்ற போது பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

முச்சக்கர வண்டியொன்றில் வந்த இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் ராஜபக்ஷவின் உருவ பொம்மையை எரிக்க விடாமல் பொலிஸார் தடுப்பதை பார்த்து விட்டு முச்சக்கர வண்டிக்குள் வைத்து ராஜபக்ஷ உருவ பொம்மைக்கு பெற்றோல் ஊற்றினார்.

சற்றுத்தூரம் சென்றதும் அதற்கு தீ வைத்து விட்டு இலங்கைத் தூதரகம் அருகே சென்றதும் உருவப்பொம்மையை வீச முயன்றார். அப்போது எதிர்பாராதவிதமாக முச்சக்கர வண்டியில் தீப்பிடித்தது.

பின்னர் தீயணைப்புப் படையினர் வந்து தீயை அணைத்தனர். எனினும் முச்சக்கர வண்டி முழுவதும் எரிந்து நாசமானது.

இதையடுத்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட 20 பேரை பொலிஸார் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (அ-2)

## மின்னல் தாக்கி இருவர் மரணம்

(கொழும்பு)

கந்தளாய் மற்றும் திம்புலாகல பகுதிகளில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த இருவரும் மின்னல் தாக்கத்திற்கு உள்ளானதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய மின்னல் தாக்கத்திற்குள்ளாகி வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

(அ-2)

## புத்தர் சிலைகளை நிறுவி மதங்களுக்கிடையில் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்த முனைகின்றனர்

### அகில இலங்கை இந்து மாமன்றம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களை முடக்கும் வகையில் புத்தர்சிலைகளை நிறுவி இந்த நாட்டில் மதங்களுக்கிடையில் மீண்டுமோர் யுத்தத்தை ஏற்படுத்த முற்படுகின்றனர் என அகில இல ங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடையூறுகள் தொடர்பாக ஆராயும் அவசர மாநாடு நல்லூரிலுள்ள அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டவர்களினாலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் திடீரென புத்தர்சிலையொன்று நிறுவப்பட்டு வருகின்றமை இந்து மக்களிடையே பெரும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களப் பெரும்பான்மையினத்தினரை குடியேற்றி வருவதோடு இந்துக்களின் புனிதத் தலங்களை முடக்கும் வகையில் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவி வருகின்றமை மன வேதனைக்குரியது.

எனவே, பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலை நிறுவப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் இல்லையேல் திருக்கோணேஸ்வரத்திற்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் எனவும் திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபை உறுப்பினர்கள் மன வேதனையுடன் தெரிவித்தனர்.

இதேவேளை இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்களை கட்டுப்படுத்தவும் வலியுறுத்தி இந்தியாவில் அன்னா ஹசாரே எவ்வாறு ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டாரோ அதுபோன்று நாமும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

தமிழர்களின் அடையாளங்களை அழிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருபுறம் இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையை பாதிக்கும் வகையில் புத்தர் சிலைகளும் மறுபுறத்தில் இந்துக்களை மத மாற்றும் முயற்சியில் கத்தோலிக்க சமயத்திலுள்ள சில பிரிவினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு இந்து சமயத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மதம் மற்றும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றம் சார்பில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

திருக்கேதீஸ்வரத்தில் புத்தர்சிலை அமைக்கப்படுவது தொடர்பாக உரிய நடவடிக்கையை தாம் மேற்கொண்டு வருவதாகவும் போராட்டங்களை நடத்துவதன் ஊடாக சாதிப்பதை விட இராஜதந்திர ரீதியாக பலவற்றை சாதிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (அ-6)

## உள்ளூர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் விழா

(கொழும்பு)




கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சங்கமும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபையும் இணைந்து உள்ளூர் உற்பத்திகளின் தரத்தினை ஏற்றுமதி தரத்திற்கு ஏற்றவிதத்தில் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரது பங்குபற்றுதலுடன் உள்ளூர் உற்பத்திகளை சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் விழா அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவு சபை கட்டடத்தில் நடைபெற்றது.

முதற்கட்டமாக குறிப்பிட்ட சில உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நுண் உதவிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு தமது உற்பத்திகளை தரமாக எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் அவற்றை பொதியிடும் முறைகள் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.


மாவட்ட கூட்டுறவு சபை உற்பத்திப் பொருட்களை சேகரிக்கவும் அவற்றின் தரத்தினை மேம்படுத்தவும் அவற்றை வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இன்னும் பல உள்ளூர் உற்பத்தி மையங்களை ஆரம்பிப்பதற்கு ஆளுநர் உறுதி வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் தலைவர் குமுதினி குணசேகர, உப தலைவர் தம்மிக்க சொலமன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் ரி.தவராசா கிராமிய சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (அ-2)


## NEWZEALANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzealand நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzealand இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(சி/6498)

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின் அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
-ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பெருந்தெருக்கள் பட்டாடை உடுக்க உள் வீதிகள் கோவணத்தையும் இழக்க

வடக்கில் உள்ள சில பெருந்தெருக்கள், அகலிப்புடன் 'காப்பற்' வீதிகளாக புனரமைக்கப்படுகின்றன.

அபிவிருத்தி நோக்கிய பயணிப்புக்கு வீதி அகலிப்பும் புனரமைப்பும் அவசியம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

அவ்வகையில் ஏ-9 வீதி, ஏ-32, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை, பண்ணை வீதி எனக் குறிப்பிட்ட வீதிகளின் நிர்மாணப்பணிகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

அதேநேரம் இந்த வீதிப் புனரமைப்பு துரிதப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் இருக்கவே செய்கின்றது.

வீதிகள் அகலிப்புடன் புனரமைக்கப்படும் போது வீதி விபத்துக்கள் தவிர்க்கப்படுவதுடன் பயணிப்புக்கான நேரத்தையும் மீதப்படுத்த முடியும்.

எனினும் வடபகுதியில் பெருந்தெருக்கள் புனரமைக்கப்படுகின்றனவே தவிர, உள்வீதிகளின் புனரமைப்பு அறவே இடம்பெறவில்லை.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத உள் வீதிகளால் மக்கள் படும் அசௌகரியம் போதுமென்றாகிவிடுகின்றன.

உள்ளூராட்சி சபைக்குட்பட்ட இவ்வீதிகளைப் புனரமைப்பதில் மாநகர சபை, பிரதேச சபைகள், நகர சபைகள் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதவைகளாக இருப்பதைக் காணலாம்.

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்து மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை நிர்வாகம் இயங்கும் போது,

அந்த சபைகளால் ஒரு குச்சொழுங்கையைத் தனிலும் செப்பனிட முடியவில்லை என்றால் இச்சபைகள் எதற்கானவை என்ற கேள்வியை மக்கள் எழுப்புவதில் தவறில்லை.

இப்போதெல்லாம் மாநகரசபை, பிரதேசசபைகளில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்றவாறு பிரிபட்டு வாக்குவாதம் நடத்தி எந்தப்பிரயோசனமும் இல்லாமல்சுவட்டம்முடிபதாகவேநிலைமைஉள்ளது.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை உள்ளூராட்சிசபைகளில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பிரிப்புகள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

நிலைமை இதுவாக இருக்கின்றபோதிலும் தமிழ் மண்ணில் தத்தம் சபைகள் மூலம் செய்து முடிக்கக் கூடிய பணிகள் பற்றி அவர்கள் சிந்திப்பதாக இல்லை.

இதன் காரணமாக உள் வீதிகள் குன்றும் குழியுமாக காட்சி தருகின்றன. பெரும்பாலான வீதிகள் முப்பது நாற்பது வருடங்களுக்கு மேலாக தாரைக் காணாதவையாக உள்ளன.

சுருங்கக்கூறின், பெருந்தெருக்கள் பட்டாடை அணிகின்ற போது, உள்வீதிகள் தங்கள் கோவணத்தையும் இழந்தவையாக உள்ளன.

எனவே உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகள் அடுத்த கூட்டத்தில் எப்படிச் சண்டையிடலாம் என விழித்திருந்து ஒத்திகை பார்ப்பதைவிடுத்து,

எப்படி எங்கள் வீதிகளை, ஒழுங்கைகளை செப்பனிடுவது; அதற்கான நிதி மூலத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது எனச் சிந்தித்தால் எங்கள் ஊர்மனை வீதிகளும் உருப்படும். நடக்குமா?

# யாழில் இருந்து வருபவர்களை ஓமந்தையில் சோதிப்பது ஏன்?

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பாஸ்கரா கேள்வி

(கொழும்பு)

வடக்கு முழுக்க முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என அரசு தெரிவிக்கும் இவ்வேளையில் ஏன் யாழில் இருந்து வருபவர்களை ஓமந்தையில்சோதிக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழ் மக்களை இன்னும் அடிமை வாழ்க்கையில் வைத்திருக்க அரசு தன்னால் முடிந்தளவு பிரயத்தனத்தை செய்வதையே ஓமந்தையில் உள்ள இராணுவச் சோதனை நிலையம் பறைசாற்றுவதாக உள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமைந்திருந்த பழைமை வாய்ந்த புத்தர் சிலைகளை அன்று தலிபான்கள் உடைத்த போது கடுமையான கண்டனத்தை வெளியிட்ட இலங்கை அரசு, இன்று தம்புள்ளவில் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஏன் இன்னும் மௌனம் காத்து வருகின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தம் முடிபடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் தமிழர்கள் பிரச் சினைகள் இன்னும் தீரவில்லை.

தமிழர்களை மீட்பதற்கான நடவடிக்கை எனக்கூறப்பட்ட போரில் பல்லாயிரம் தமிழ் பொது மக்கள் உயிரிழந்தமை குறித்து இன்னும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. நீதி, நியாயம் கிடைக்கவில்லை.

அத்துடன் அரசு தான் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் காலத்தை இழுத்தடிப்பதற்கே முயற்சிக்கின்றது. வடக்கு, கிழக்கில் அத்துமீறி மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கின் அனைத்து இடங்களும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என அரசு தெரிவிக்கும் இவ்வேளையில் ஏன்யாழில் இருந்து வருபவர்களை ஓமந்தையில் சோதிக்க வேண்டிய தேவையுள்ளது எனக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ் மக்களை இன்னும் அடிமை வாழ்க்கையில் வைத்திருக்க அரசு தன்னால் முடிந்தளவு பிரயத்தனத்தை செய்வதையே ஓமந்தையிலுள்ள இராணுவச் சோதனை நிலையம் பறைசாற்றுவதாக உள்ளது.

மே தினத்துக்கு வந்த சிங்கள சகோதரர்கள் மீது ஓமந்தையில் மேற்கொள்ளப்பட்ட அசௌகரியங்கள் மூலம் அவர்கள் ஓரளவுதமிழ் மக்கள் அன்றாடம் படும் சோதனைகளையும் வேதனைகளையும் உணர்ந்து கொண்டனர்.

எனவே அரசு, சமய, புனித தலங்கள் மீது, கை வைத்துள்ளவர்களை கைது செய்யாமல் இருப்பதை உடனடியாக நிறுத்தி குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த ஆவன செய்ய வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர உறுப்பினர் சி. பாஸ்கரா தெரிவித்தார். (அ-2)

# சீனாவின் நட்புறவில் இருந்து இலங்கை மெதுவாக விலகுகிறது

## இதனால் அமெரிக்கா இங்கு வரும் என்கிறார் குணதாச

இலங்கை அரசாங்கம் சீனாவுடனான நட்புறவிலிருந்து விலகி அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்திக்கொள்வதற்கான இராஜதந்திர காய்நகர்த்தல்களை முன்னெடுப்பதாக குற்றஞ்சாட்டும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சரத் பொன்சேகாவை விடுவிக்கும் திட்டத்தை அமெரிக்கா முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர, இந்தியா, அமெரிக்கா விரித்த வலையில் அரசாங்கம் சிக்கிக் கொண்டுள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள சூழ்நிலையில் இலங்கையிலிருந்தும் தூதுக்குழுவொன்று இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொள்கிறது. அதன் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீன நட்புறவு கொள்கையிலிருந்து முழுமையாக பிரித்தெடுக்கும் படலம் முற்றுப்பெற்றுள்ளது.

ஏற்கெனவே சீனாவுடனான நட்புறவிலிருந்து அரசாங்கம் மெதுமெதுவாக விலகிவருகிறது. இதன்பின்னர் நிச்சயமாக அமெரிக்காவின் இராணுவ முகாம் இலங்கையில் ஸ்தாபிக்கப் படும்.

இதன்பின்னர் சரத் பொன்சேகா விடுதலைக்கான காய்நகர்த்தலை அமெரிக்கா மேற்கொள்வதோடு அதற்கான பாரிய அழுத்தத்தை ஜனாதிபதியின் மீது பிரயோகிக்கப்படும்.

சிங்கள பௌத்தர் என்ற முத்திரையின் கீழ் சரத் பொன்சேகாவை விடுவித்து அதன்பின்னர் பொன்சேகாவை ஆட்சிக்கு கொண்டு வந்து வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை ஒழிக்கும் செயற்பாடுகளை நிறைவேற்றி அதனை இனச் சங்காரம் எனக் காரணம் காட்டி இலங்கையை அமெரிக்கா இரண்டாகப் பிரிக்கும்.

இச் சதித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை இந்தியாவுடன் மேற்கொள்ளவே ஹிலாரி கிளின்டன் புதுடில்லி வந்துள்ளாரென்றும் டாக்டர் குணதாச அமரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-2)

## போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் கைதானார்

சிறுவர்களை பயன்படுத்தி பாரியளவில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை அனுராதபுரத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சாரதி ஒருவரையும் அனுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி சந்தேக நபர்களுக்கு இரகசியமாக பொருட்களை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த பெண் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பில் அனுராதபுர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வாழுங்கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஸ்ரீ ரவி சங்கரின் வாழும் கலைப் பயிற்சிகளான மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், சுதர்சன கிரியா, தியானம், யோகா போன்ற பயிற்சிகள் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை மாலை 5 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பழக்கமே ஒழுக்கம் தரும்



கடவுளிடம் உறுதியாகவும் தூய்மையாகவும் நம்பிக்கை உடையவனாகவும் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துவிதமான இடைஞ்சல்களும் மறைந்து போகும்.


ஒழுக்கம் மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கத்தால் உருவாகிறது. பழக்கங்களால்தான் ஒழுக்கத்தை மேலும் சிறந்ததாகச் சீர்படுத்தி அமைக்க முடியும்.

அனைத்து விதமான அறிவும் மனிதனுக்குள் இருப்பதாக வேதாந்தம் கூறுகிறது. குறிப்பாக சிவனிடமும் இருக்கிற அறிவையும் விழித்து எழும்படி செய்வதுதான் ஆசிரியனுடைய கடமை.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி. மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவுவது.

நல்லவர்கள் மற்றவர்களின் நன்மைக்காக மட்டும் வாழ்கிறார்கள். மற்றவர்களின் நன்மைக்காக அறிஞன் தன்னைத்தானே தியாகம் செய்யவேண்டும். உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெறமுடியும். இதைத்தவிர வேறு வழியில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும்.





பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட வற்றாப்பளை பொதுச் சந்தை கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அந்நிகழ்வில் அவர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# முல்லைத்தீவு கரையில் வெளிச்சவீடு வேண்டும்

## கடற்றொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வெளிச்சவீடு இல்லாது அவதிப்படுவதாகவும் மிக விரைவில் முன்பிருந்த இடத்தில் நவீன முறையிலான ஒரு வெளிச்ச வீட்டினை அமைத்துத்தர வேண்டும் என முல்லை. மாவட்ட மீனவர்சங்க பிரதிநிதிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

முல்லை.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரமயமாக்கல் திட்ட ஆய்வு கருத்தரங்கின் போதே அவர்கள் மேற்குறித்த கோரிக்கய்யை முன் வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்கு முன் 3 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட சிறிய ரக படகுகளிலும் 40 கரைவலைத் தொழில் மூலமும் மீன்பிடித் தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 580 சிறியரக படகுகளே எமது மக்களிடம் உள்ளது. தற்போது எமது மீன்பிடி இடங்களில் வேறு மாவட்டத்தில் இருந்து தொழிலில் ஈடுபடுவர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இங்கு முறையற்ற விதத்தில் வெடிபொருட்களைப் பயன்படுத்தியும் சட்ட விரோத வலைகளைப் பயன்படுத்தியும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டும் வருகின்றனர்.

எமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அத்தோடு கடல் வளங்களும் அழிந்து போகின்றன. எனவே, மேற்குறித்த விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

(அ-3-15)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 6 விவசாய குளங்கள் புனரமைப்பு

(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 6 விவசாயக் குளங்களும் அதனோடு இணைந்த நீர்ப்பாசனக் கால்வாய்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி ஐயங்கன் குளம் 52 மில்லியன் ரூபா செலவிலும் பழைய திருமுறிகண்டிக் குளம் 26 மில்லியன் ரூபா செலவிலும் மல்லாவிக்குளம் 24 மில்லியன் ரூபா செலவிலும் தேறாங்கண்டல் குளம் 17 மில்லியன் ரூபா செலவிலும் கோட்டைகட்டிய குளம் 32 மில்லியன் ரூபா செலவிலும் அம்பலப் பெருமாள் குளம் 56 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்பு செய்யப்படுகின்றன.

இக்குளங்கள் புனரமைக்கப்பட்டு முடிவடைந்ததும் இடப்பெயர்வின் பின் மீள்குடியேறியுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படு[illegible]ன எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-3-15)

# சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக மேர்வினின் விசாரணை காத்திருப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஊழல் மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து சட்ட ஆலோசனைகள் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அறிக்கைக்கு அமையவே அமைச்சருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆணைக்குழு தீர்மானிக்கும் என அதன் தலைவர் டி.ஜே.டீ.எஸ். பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் அமைச்சருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அந்த விசாரணைகள் இரகசியமான முறையிலேயே மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் இரகசிய தன்மைக்கு அமைய விசாரணைகள் முடியும் வரை விசாரணை குறித்த விபரங்கள் பொதுமக்களுக்கு வெளியிடப்படமாட்டாது எனவும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நோயாளர்களே தங்க நகைகள் கவனம்

## வைத்தியசாலை பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் அனைவரும் தாங்கள் அணிந்து வரும் தங்க நகைகளில் அவதானமாக இருக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பொலிஸ் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கூடுதலாக தமது தங்க நகை ஆபரணங்களை வைத்தியசாலைக்கு அணிந்து வராமல் வீட்டில் வைத்துவிட்டு வருமாறும் அவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருபவர்களிடம் போலியான சிலர் தம்மை வைத்திய சாலை பணியாளர்கள் என அடையாளப்படுத்திக் கொண்டு நோயாளர்கள் அணிந்திருக்கின்ற ஆபரணங்களை கழற்றுமாறு தந்திரமாக கூறி அபகரித்துச் சென்று விடுகின்றனர்.மேலும் விடுதிகளில் தங்கியிருப்போர் தமது பொருட்களில் கண்காணிப்போடு இருக்குமாறும் தெரி வித்துள்ளனர்.சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் முதியவர்களினை தனியாக விடுதிகளுக்கு அல்லது வைத்தியசாலைக்கு அனுப்பாமல் அவர்களோடு ஒருவரையும் அனுப்புமாறும் கேட்கப்படுகின்றனர்.

முதியவர்களே அதி களவில் பிறரிடம் ஏமாந்து தமது பெறுமதிமிக்க ஆபரணங்கள் உட்பட பொருட்களினையும் இழப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நோயாளர்களிடம் ஆபரணங்களினை கழற்றுமாறு கூறுபவர்களிடம் ஆபரணங்களை கழற்றிக் கொடுக்காமல் [illegible]ங்களிற்கு துணையாக வந்தவர்களிடமோ அல்லது வைத்தியசாலை நிர்வாகத்தினரோடு உறுதிப்படுத்திய பின்னர் ஆபரணங்களை உரியவர்களிடம் கொடுக்குமாறும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் ஈடுபடும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கூட மூதாட்டி ஒருவரின் தாலிக்கொடியொன்றை வைத்தியசாலை பணியாளர் என அடையாளப்படுத்திக் கொண்ட இனந்தெரியாத நபர் ஒருவர் அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2-4)

# இலங்கை வந்த இராஜதந்திரிகள் வேலைத்திட்டங்கள் குறித்து திருப்தி

## ஊடக அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக வெளிநாடுகளை சேர்ந்த இராஜதந்திரிகள் உள்ளிட்ட 10 பிரதிநிதிகளின் குழுக்கள் கடந்த 4 மாதங்களில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் கட்டார் நாட்டின் மன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் விஜயம் செய்தனர்.

அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் பாலஸ்தீன ஜனாதிபதி, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சீசெல்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர், இஸ்ரேல், ஒஸ்திரியா, ஐரோப்பா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தனர். இவர்களை தவிர ஜப்பான் பிரதமரும் இலங்கை வந்திருந்தார். இலங்கை வந்திருந்த பிரதிநிதிகளின் பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்ததுடன் அது தொடர்பில் திருப்தி தெரிவித்துள்ளதாக பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

(அ-2)

# துமிந்தவுக்கு பிடியாணை பிறப்பிக்க முடியாது

## பதிலாகசட்டத்தரணி ஆஜராகலாம்

(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரன் உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்தசில்வாவை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்க முடியாது என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று அறிவித்தார்.


துமிந்த சில்வா எம்.பியை கைது செய்ய முடியாது என இரகசியப்பொலிஸார் இது வரை நீதிமன்றத்திற்கு அறிவிக்கவில்லை என்பதால் அவரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்க முடியாது என நீதவான் தெரிவித்தார்.

சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதி பெறுவதை தடுப்பதற்காகவே ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக பிரசாரம் செய்யப்படுவதாக கொலை வழக்கின் சந்தேக நபர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அனுஷ பிரேமரட்ன நீதிமன்றில் தெரிவித்தார்.

இக்கொலை வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சார்பில் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய ஆஜராக முடியாது என கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் அளித்த உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

வழக்குரைஞர் ஹேமந்த வர்ணகுல சூரியவோ வேறு எந்த வழக்குரைஞரோ துமிந்த சில்வாவுக்காக ஆஜராக முடியும் என கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்தது. (அ)

# புனே வாரியர்ஸை வீழ்த்தியது ராஜஸ்தான்



ஐ.பி.எல் தொடரின் புனே வாரியர்ஸுக்கு எதிரான நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல் இருபது-20 தொடரின் 52 ஆவது லீக் போட்டி,புனே வாரியர்ஸ் அணிக்கும்,ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கும் இடையே புனேயில் நேற்று மாலை நடந்தது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் புனே வாரியர்ஸ் அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்கம் முதலே ஓட்டங்களை குவிக்க திணறியது.

5 ஓவர்கள் வரை ஓட்டங்கள் சேர்ப்பில் மந்தமாக செயற்பட்ட தொடக்க வீரரான அணித் தலைவர் கங்குலி 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிடிகொடுத்து வெளியேறினார். அவரை தொடர்ந்து மற்றொரு தொடக்க வீரர் மைக்கேல் கிளார்க் 16 ஓட்டங்களில் எல்.பி. டபிள்யூ ஆனார்.

அதன் பிறகு றொபின் உத்தப்பா உடன் ஜோடி சேர்ந்த மஜும்தார் அடுத்தடுத்து 2சிக்ஸ் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். ஆனால் அவரது ஆட்டம் நீண்டநேரம் நிலைக்கவில்லை. 30 ஓட்டங்களை சேர்த்த மஜும்தார் போல்டானார். பொறுப்பாக ஆடிய உத்தப்பா 13 ஓட்டங்களில் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த அஞ்சலோ மத்யூஸ் ஓரிரு ஓட்டங்களாக சேர்த்த நிலையில்,11 ஓட்டங்கள் எடுத்தபோது ஓவை ஷாவின் குறி தவறாத த்ரோவில் ஆட்டமிழந்தார். மிதுன் 11 ஓட்டங்களில் போல்டானார். கடைசி வரை ஓட்டங்களை உயர்த்த முயன்ற ஸ்டீவன் சிமித் 18 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது இருந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் புனே வாரியர்ஸ் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களில் சுருண்டது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தரப்பில் ஷோன் டைட் சிறப்பாக பந்துவீசி 4 ஓவர்களில் 13 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

126 ஓட்டங்கள் என்ற எளிய இலக்குடன் பதிலெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் ஆரம்பத்திலேயே ஆரம்ப வீரர் ரஹானே ஆட்டமிழந்து வெளியேறினார். பொறுப்பாக ஆடிய ராகுல் ராவிட் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பிறகு ஷேன் வோட்சன் அதிரடியாக ஆடி 29 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்து ஆடி வந்த அசோக் மெனாரியா 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.எளிய இலக்கை விரட்டிய ஷேன் வோட்சன் 51 பந்துகளில் 4 சிக்ஸ்சர், 10 பவுண்டரிகள் அடித்து 90 ஓட்டங்களை குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஷேன் வோட்சனின் அதிரடி ஆட்டம் மூலம் 16.2 ஓவர்களில் ராஜஸ்தான் றோயல்ஸ்



வெற்றி இலக்கை எட்டியது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷேன் வோட்சன் தெரிவானார்.

# கிங்ஸ் லெவின் பஞ்சாப் வெற்றி டெக்கான் சோகம் தொடர்கிறது

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 53-வது லீக் ஆட்டம் நேற்றிரவு ஹைதராபாத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் குமார் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், டேவிட் ஹசி தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

கடந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணியில் விளையாடிய டேல் ஸ்ரெயின், ஆனந்த் ராஜன் ஆகியோர் நீக்கப்பட்டு ரஸ்டி தெரோன், அபிஷேக் ஜுன்ஜுன்வாலா ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணியில் குர்கிரத் சிங், அபிஷேக் நாயர், ரியான் ஹரிஸ் ஆகியோர் நீக்கப்பட்டு டேவிட் மில்லர் ,சித்தார்த் சிட்னிஸ், ரமேஷ் பொவார் ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

அதன்படி கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக மன்தீப் சிங்கும், ஷோன் மார்சும் களமிறங்கினர்.

ஷோன் மார்ஷ் 22 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த நிதின் சைனி 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து மன்தீப் சிங்குடன் டேவிட் ஹசி ஜோடி சேர்ந்தார்.

ஹசியும் 16 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மன்தீப் சிங் அதிரடியாக ஆடி 75 ஓட்டங்களைக் குவித்தார்.

இறுதியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது.

171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் டெக்கான் அணி பதிலெடுத்தாடக் களமிறங்கியது.

ஆனால் ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் டெக்கான் சார்ஜர்ஸின் விக்கெட்டுகள் சரிந்தன.

முடிவில் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களையே டெக்கானால் பெற முடிந்தது.

இதனால் 25 ஓட்டங்களால் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மன்தீப் சிங் தேர்வானார்.

# கிரிக்கெட் சூதாட்டத்திற்காக இலங்கையில் இந்திய அழகிகள்?

செப்ரெம்பர் 18-ம் திகதிமுதல் ஒக்டோபர் 7-ம் திகதிவரை இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் போட்டியில், சூதாட்ட தரகர்கள் விபசார அழகிகளை வைத்து சூதாட்டம் (பிக்சிங்) செய்ய திட்டமிட்டு இருப்பதாக பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளது.

சமீபத்தில் லண்டனில் இருந்து வெளியாகும் பத்திரிகையயொன்று பாலிவுட் நடிகைகளை பயன்படுத்தி சூதாட்ட தரகர்கள் ஆட்டத்தை பிக்சிங் செய்வதாக கூறியிருந்தது.

இதனைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐ.சி.சி.) ஊழல் தடுப்பு பிரிவு விசாரணை நடத்தி வருகிறார்கள்.

டில்லியைச் சேர்ந்த சூதாட்டத் தரகர்கள் விபசார அழகிகளை இலங்கைக்கு அனுப்பி இருபது -20 உலகக் கிண்ண போட்டியை பிக்சிங் செய்ய முயற்சிப்பதாக பரபரப்பான தகவல் தெரியவந்தது.

கடந்த மார்ச் மாதம் 31-ம் திகதி விபசார புரோக்கர் 8 அழகிகளுடன் விமானத்தில் கொழும்பு வர இருந்தார்.

கடைசி நேரத்தில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது

விபசார் அழகிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட டைரியில் சூதாட்ட தரகர்களின் தொலைபேசி இலக்கங்கள் உள்ளன.

இதுகுறித்து இலங்கையிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜெய்ப்பூர் வெள்ளிவிழாவை முன்னிட்டு இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகள் விண்ணப்பிக்க வேண்டுகோள்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாக் (1987-2012) கொண்டாட்டத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளாகவுள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகள் பங்குபற்றும் முச்சக்கர வண்டி, ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், தடைதாண்டி ஓட்டம், மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீத கதிரை மற்றும் கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 30.06.2012ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பயனாளிகள் ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை இலவசமாக பெற்று அதனை பூர்த்தி செய்து எதிர்வரும் 25.06.2012ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக 'தலைவர், ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

அல்லது நேரடியாக கையளிக்க முடியும்.

பயனாளி ஒருவர் ஆகக்கூடியது இரண்டு போட்டிகளில் மட்டுமே பங்குபற்ற அனுமதிக்கப்படுவர் என ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

# பாடசாலைகளில் இருபது-20 கிரிக்கெட் தடை செய்யப்பட வேண்டும்

## -பேராசிரியர் அர்ஜூன் டி சில்வா

பாடசாலை மட்டத்தில் இருபது -20 கிரிக்கெட் போட்டிகள் தடைசெய்யப்பட வேண்டும் என பேராசிரியர் அர்ஜுன் டி சில்வா தெ வித்துள்ளார்.

இலங்கை விளையாட்டு மருத்துவ குழுவின் தலைவரான அர்ஜுன் டி சில்வா, மருத்துவ காரணங்களையும் முன்வைத்து இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கிரிக்கெட்டின் வேகமான வகையான இந்த இருபது- 20 போட்டிகள் பாடசாலை சிறுவர்களின் உடல் முன்னேற்றத்திற்கு சிறந்தவையல்ல என தெரிவித்த அவர், அவை பாடசாலை மட்ட கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக தடைசெய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த பேராசிரியர் அர்ஜுன் டி சில்வா,

இருபது-20 போட்டிகள் கிரிக்கெட் வீரர்களின் கிரிக்கெட் நுட்ப முறைகளிலும் பாரிய பிழைகளை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டிகளில் சரியான நுட்ப முறைகளினை பயிற்றுவிக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் இவர் தெரிவித்தார்.

இதன்படி இலங்கையின் விளையாட்டு மருத்துவப் பிரிவு,பாடசாலைகளில் இருபது -20 போட்டித் தொடர்களை நடத்துவதை தடைசெய்யுமாறு இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சரை வேண்டியுள்ளது.

இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமாயின் இனிமேல் இலங்கையில் பாடசாலை மட்டத்தில் இருபது-20 தொடர்கள் நடத்தப்படமாட்டாது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் அமைப்பு 2011- 2012 ஆம் ஆண்டிற்கான பருவ காலத்தில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான இருபது-20 தொடர் ஒன்றை நடத்தியிருந்தது.இத் தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரியும், கண்டி திரித்துவக் கல்லூரியும் மோதியிருந்ததுடன் இதில் திரித்துவக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றிருந்தது.

இலங்கை விளையாட்டு மருத்துவக் குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் அத் தொடரே பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற ஒரேயொரு இருபது-20 தொடராக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி மோதுகின்றது.

# தன்னலம் கருதாச் சேவையாளர் ஆனந்த சுப்பிரமணிய சர்மா

எமது பிரதேசத்தில் பருத்தித்துறை கிராம அலுவலர் பிரிவில் வசித்து வரும் வைத்தீஸ்வர சர்மா ஆனந்த சுப்பிரமணிய சர்மா அவர்கள் கடந்த 50 வருடங்களாக எமது பிரிவில் திருமண வாழ்வில் பிணைக்கப்பட்டு வசித்து வருகின்றார்.

தாம் வாழும் பிரதேசத்தில் தன்னாலான சோதிட சேவையை வழங்கிவரும், இவர் 1980 ஆம் ஆண்டிலிருந்து சோதிட ஆய்வை மேற்கொண்டு வந்ததுடன், 1991 ஆம் ஆண்டில் எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து பொது மக்களுக்கான சோதிட சேவையை ஆரம்பித்தார். இவர் இச் சேவைக்காக எதுவித ஊதியமும் இதுவரை எவரிடமும் பெற்றதில்லை.

அத்துடன் பருத்தித்துறை நகரில் மத்திய மருந்தகம் அமைப்பதற்கு பல்வேறு தரப்பினரின் நெருக்குதலின் மத்தியிலும் கடுமையாகப் பாடுபட்டு உதவிபுரிந்தார்.

இத்தகைய தன்னலம் கருதாத சேவையாளரின் திருமண வாழ்வின் 50-வது வருட பூர்த்தியும் 75-வது வருட நிறைவையும் 09.05.2012ஆம் திகதி காண்பதையிட்டு நாமும் மகிழ்வதுடன் திரு.திருமதி ஆனந்த சுப்பிரமணிய சர்மா அவர்களையும் பல்லாண்டு இணை பிரியாது வாழ வாழ்த்துகின்றேன்.

த.ஜெயசீலன்
பிரதேச செயலர்,
பருத்தித்துறை

# சிங்கக்கொடி விவ...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பில் வெளியான அறிக்கைகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்திய மே தின நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்,பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் தமது இலங்கை பயணம் தொடர்பாக இந்திய மக்களவையின் எதிர்க் கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்திய மேதின நிகழ்வுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்கக் கொடியை ஏந்திய விவகாரம் குறித்து இதன்போது கடுமையான விவாதங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மேதின நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சம்பந்தன் சிங்கக் கொடி ஏந்தியமை தொடர்பாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோபமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்த மேதின நிகழ்வில் சம்பந்தன் சிங்கக் கொடி ஏந்தியமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பகிரங்கமாக மன்னிப்பு கோரியிருந்தார்.ஆனால்இவ்வாறுசிங்கக்கொடியை ஏந்தியமைக்காக தான் வருந்தவில்லை என்றும், மன்னிப்பு கோர வேண்டிய அவசியம் இல்லை என்றும் சம்பந்தன் தெரிவித்திருந்த நிலையில் சிங்கக் கொடி விவகாரம் குறித்து இக்கூட்டத்தில் கடுமையான விவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

# நாட்டின் அரசியல்...

தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாட்டின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை ஏந்த வைத்தது போல,தேசிய இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்திலும் அவர்களை ஓர் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு நாம் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டே இருப்போம்.

மகிந்த அரசாங்கத்திடம் திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லாமையால், நாட்டு மக்கள் பெரும் பொருளாதாரச் சுமையைச் சுமந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்த அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து துரத்தியடிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே நாட்டுமக்கள் இருக்கின்றனர்.

யாழில் இடம்பெற்ற எமது மேதினக் கூட்டத்திலும், கொழும்பில் இடம்பெற்ற மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் 19 ஆவது சிரார்த்ததின நிகழ்விலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு தமது உணர்வலைகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக்க. (எ-11)

# இராணுவ...

கிழக்கில் இராணுவப் பிரசன்னம் போன்றவை குறித்து பாதுகாப்பு செயலருடன் நடைபெற்ற கூட்டத்தில் பேசுவதற்கு வசதிகள் இருக்கவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவித்தார். (எ-11)

# ஈழத்தமி...

பலிகொண்ட இந்தப் போர் முடிந்து 3 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் போர் நினைவு நாளில், தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் சர்ச்சைக்குரிய செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க கியூ பிரிவு பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மதுரை, திண்டுக்கல், விருந்துநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் நடவடிக்கைகளை கியூபிரிவு பொலிஸார் கண்காணித்து வருவதாக கியூபிரிவு பொலிஸார் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

முகாம்களில் தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் தவிர வெளிநபர்கள் யாராவது தங்கியுள்ளனரா, போர் நினைவு நாளையொட்டி சட்டத்துக்குப் புறம்பான வகையில் செயற்படுகின்றனரா என்று கண்காணித்து வருகிறோம். அதேபோல முகாம்களுக்கு வெளியே வீடுகளில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# கிழக்கு மாகாண...

மாவட்ட ரீதியாகவும் பின் னர் மூன்று மாவட்டங்களையும் இணைத்து இக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும,ஏ.எல்.எம். அதாவுல்லா, கிழக்குமாகாண ஆளுனர்மொஹான் விஜயவிக்கிரம, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரதி அமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கூட்டத்திலேயே கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் கிழக்கு மாகாண சபையினை கலைத்து தேர்தல் நடத்தினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் வெற்றியடைய முடியுமென முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உட்பட இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அரச தரப்பு மாகாணசபை உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் சபையை கலைக்கக் கூடாது என அண்மையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இறக்குமதிகள்...

மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இறக்குமதி செலவு 5.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

அதேவேளை 2012ஆம் வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட 8 சதவீத பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, சர்வதேச நாடுகளில் பொருளாதார வளர்ச்சி இறங்கு நிலையான அலகுகளையே கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை,சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்காலத்தில் எவ்வாறான தொடர்புகளை பேணுவது என்பது குறித்து எதிர்வரும் மாதம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும்அஜித்நிவாட்கப்ரால் கூறினார். (எ-11)

# கூட்டமைப்புடனான...

நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனிடமும் குறிப்பிட்டுள்ளேன்.

இவ்வாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நற்செயதி ஒன்றை இந்த நாட்டுக்கும் உலகிற்கும் வழங்கியுள்ளார். இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இது குறித்து திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வு காண்பது முக்கியமானதாகும், இவ்விவகாரம் தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதால் மட்டுமே தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வைக் காணமுடியும்.

யாழ்.மேதினக் கூட்டத்தில் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வைக் காணத் தயாராக இருப்பதாக நல்லதொரு சமிஞ்சையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தச் செய்தியினை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் உட்பட அனைத்துத் தரப்புகளும் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனித்துச் செயற்படமாட்டார்.

ஆரம்பகாலங்களில் பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா போன்ற ஒப்பந்தங்களின் மூலம் அச்சிங்களத் தலைவர்கள் பெரும்பான்மை இனமக்களின் ஆதரவுகளை இழந்திருந்தனர். இந்நிலை தனக்கு ஏற்படக்கூடாது என்பதில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவனமாக உள்ளார். இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் நான் பலமுறை கூறியுள்ளேன்.

எனவே நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அரசியல் தீர்வுக்கான ஒரு களமாக பயன்படுத்திக் கொள்வதே சிறந்தது. இதில் அனைத்துத் தரப்புகளும் உள்வாங்கப்படுவதால் இவ் விவகாரம் தொடர்பில் கருத்து ஒற்றுமைக்கு வருவது இலகுவானது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பங்குபற்ற வைக்கும் வகையில் அரசாங்கம் நம்பகத் தன்மையை ஏற்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

விசுவமடுவில் புதியதோர் உதயம்....

அபி கனி புத்தக நிலையம்

பாடசாலை மாணவர்கள், பட்டதாரிகளின் தேவைகளை உணர்ந்து சேவைகள் ஆற்ற முன்வந்துள்ளோம். தரம் 1 - A/L வரைக்குமான சகல விதமான பாடப் பயிற்சி புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், விண்ணப்பப் படிவங்கள் அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

அபி கனி புத்தக நிலையம்
சுண்டிக்குளம் சந்தி,
முல்லை வீதி, விசுவமடு.
தொலைபேசி : 0775144093

என்றும் நாம் உங்களோடு

(C-6562)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

ஆங்கிலம் - புதிய பிரிவு
10.05.2012 வியாழக்கிழமை

பிரிவு 1 : காலை 8.00 - 9.00
பிரிவு 2 : மாலை 4.00 - 5.00

காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456

## மரண அறிவித்தல்

### தம்பு சித்திரம்



கரணவாய் தெற்கு, அண்ணா சிலையடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சித்திரம் அவர்கள் நேற்று 08.05.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.05.2012 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரணவாய் வெல்லன் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்: மகன் - த. ரவிச்சந்திரன்

உரிமையாளர்

அம்சன் மரக்காலை
அண்ணா சிலையடி,
கரணவாய் தெற்கு.

வேலுப்பிள்ளை மரக்காலை
சாமியன் அரசடி,
கரவெட்டி.

(C-6568)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.